பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

வலம்புரி
The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 03 சனிக்கிழமை (19.07.2003) தொலைபேசி -.2223378 ஒலி 212

# முல்லைத்தீவில் கண்காணிப்புக் குழுவின் தொடர்பு நிலையம் அமைக்கப்படும்

## கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தமது புதிய தொடர்பு நிலையம் ஒன்றை முல்லைத்தீவில் ஆரம்பிககவுள்ளனர். முல்லைத்தீவுப் பகுதியல் பெருமளவு கடல் மோதல் சம்பவங்கள் நடைபெற்று வருவதால் இவ்வேறபாடு மேற்கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கண்காணிப்புக் குழுவினர் வாரத்தில் ஒரு தடவை முல்லைத்தீவுக்குச் சென்று அங்கு பொது மக்களினதும் புலிகளினதும் முறைப்பாடுகளைக் கேட்டறிவது என்று கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதி கேணல் சூசையுடனான சந்திப்பு, கண்காணிப்புக் குழுத்தலைவர் முல்லைத்தீவுக் கரையோரத்திற்கு விஜயம் செய்தமை ஆகியவற்றைத் தொடர்ந்தே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

கரையோர மீன்பிடி மக்கள் தாம் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்தும் தொல்லைகளை அனுபவித்து வருவதாக கண்காணிப்புக் குழுத்தலைவருக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

கடற்புலிகளின் படகை இலங்கை இராணுவம் தாக்கியது போன்று மேலும் மேலும் தாக்குதல் சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்குமாறு கேணல் சூசை கண்காணிப்புக் குழுத் தலைவரைக் கேட்டிருந்தார்.

இதையடுத்து இவற்றைத் தீர்க்கும் வகையில் முல்லைத்தீவில் கண்காணிப்புக் குழுவின் தொடர்பு நிலையமொன்று அமைவது அவசியம் என்று கருதப்படுகிறது. (இ)

# ஓயாத அலைகள் - 1 வெற்றிவிழா இன்று

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரை மீட்பதற்காக நடத்திய மிகப்பெரும் தாக்குதலான ஓயாத அலைகள்-ஒன்றின் வெற்றி விழா இன்று முல்லைத் தீவில் கோலாகல எழுச்சியுடன் கொண்டாடப்படவுள்ளது.

முல்லைத்தீவுப் பொது மைதானத்தில நடைபெறவுள்ள இந்த வெற்றி விழாவின்போது, ஓயாத அலைகள் ஒன்றின் தாக்குதல்களைச் சித்திரிக்கும் ஊர்திகள் அணிவகுப்புக்கள் மற்றும் கலைநிகழ்வுகள் உட்பட பல நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இத்தாக்குதலின்போது, ஆயிரத்து இருநூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

314 விடுதலைப் புலிப் போராளிகளை இழந்த நிலையில், முதன் முதலாக இலங்கை இராணுவத்திடம் இருந்து இரண்டு ஆட்லறிப் பீரங்கிகளும், கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான ஆயுதத் தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# ஜனாதிபதிக்கு தெரியாமல் இடைக்கால சபை வரைபு புலிகளிடம் கையளிப்பு!

## அரசியல் அமைப்புக்கு முரணாம்

(நமது நிருபர்)

**இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவி என்ற வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கருத்துக்களைக் கேட்டு அறிந்து கொள்ளாமலும், அவருக்குத் தெரியாமலும் வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்டவரைபை அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் கையளித்துள்ளமை அரசியல் அமைப்பிற்கு முரணானது. இதனால், சட்டரீதியான சிக்கல்கள் ஏற்படலாம். இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர். கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.**

அரசாங்கம் நோர்வேயின் முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் மூலம் விடுதலைப் புலிகளிடம் நேற்று முன்தினம் கையளித்துள்ள இடைக்கால நர்வாகசபை திட்டவரைபு குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சரத் அமுனுகம மேலும் கூறுகையில்,

விடுதலைப் புலிகளின் தற்போதைய செயற்பாடுகள் யுத்தத்திற்கான ஓர் அறிகுறியை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் அரசு நவீனரக கடல், தரை மார்க்க ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக்கூடிய காலகட்டத்தில் உள்ளது. இதற்காகவே பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், கடற்படைத் தளபதி தயா சந்தகிரியும் கடற்படையினருக்கு வேண்டிய நீண்டதூரம் செல்லக் கூடிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு அண்மையில் இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ளனர்.

ஜனாதிபதிக்கோ, எதிர்க்கட்சிக்கோ தெரியாமல் வடக்குகிழக்கு இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகளை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ளமையால், பாரிய பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உருவாகியுள்ளது. இது எதிர்காலத்தில் ஜனாதிபதியோ, எதிர்க்கட்களோ அரசாங்கத்துடன் ஒத்துழைக்காமல் இருக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கைதான புலிகள் நீதிமன்றில் ஆஜர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடிப் பொலிஸ் சோதனைச் சாவடியில் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட நான்கு பெண் போராளிகள் உட்பட 8 விடுதலைப் புலி உறுப்பினர்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் 8 பேரும் நேற்றுக்காலை பலத்த பாதுகாப்புடன் மட்டக்களப்பு நீதிமன்றில் பொலிஸாரால் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

விடுதலைப்புலி உறுப்பினர்கள் எட்டுப் பேரும் ஆயுதங்களுடன் கைது செய்யபட்ட மேற்படி வழக்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் தொடர்புபடுவதால் வழக்குக் கோவையை சட்டமாதிபருக்கு அனுப்பி ஆலோசனையைப் பெறுமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிவான் அப்துல் கபூர் உத்தரவிட்டார். (த-14)

# துறைமுக அதிகார சபையிடம் பரு. துறைமுகம் கையளிப்பு

(பருத்தித்துறை)

யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பிரிவின் கீழ் இயங்கிவந்த பருத்தித்துறைத் துறைமுகம் இலங்கைத் துறைமுக அதிகார சபையிடம் நேற்று உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

துறைமுகத்தை அதிகார சபையிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை 10.30 மணிக்கு துறைமுக மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் துறைமுக அதிகார சபைத் தலைவர் பராக்கிரம திஸாநாயக்க பொது முகாமையாளர் டபிள்யூ. பியதாஸ மற்றும் யாழ். அரச அதிபர் செ.பத்நாதன், திட்டமிடல் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை, பருத்தித்துறைப் பிரதேசச் செயலர் ஏ.சிவசுவாமி, கரவெட்டிப் பிரதேசச் செயலர் பி.வீரபத்திரப்பிள்ளை உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறைத் துறைமுகம் 1990 ஆம் ஆண்டுமுதல் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவின் கீழ் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (த-52)

# இடைக்கால சபை வரைபு பாலாவுக்கு அனுப்பிவைப்பு

(நமது நிருபர்)

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபை லண்டனில் உள்ள அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு புலிகள் அனுப்பி வைத்துள்ளனர்.

இடைக்காலசபைத் திட்டவரைபு தொடர்பாக அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் அறிக்கையை புலிகள் எதிர்பார்த்திருப்பதாகவும் அவரது அறிக்கை கிடைத்ததும் இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபு தொடர்பான தமது கருத்தை தெரிவிக்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது. (வ)

# இடைக்கால சபை வரைபு புலிகளால் ஆராய்வு

இலங்கை அரசினால் விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை திட்டவரைபை விடுதலைப் புலிகள் தற்போது நுணுக்கமாகப் பரிசீலித்து வருவதாக விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேக்கநிலை அடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் சட்ட வலுவுடைய இடைக்கால நிர்வாகத்தைத் தமமிடம் வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தமையை அடுத்து அரசு இடைக்கால நிர்வாகசபை திட்ட வரைபை நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் மூலம் புலிகளிடம் கையளித்திருந்தனர்.

விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டிருந்த திட்டவரைபு தற்போது விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராலும் மற்றும் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களினாலும் நுணுக்கமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. (வ)

# உலக வங்கிப் பிரதிநிதிகள் குழு திருமலைக்கு விஜயம்

(திருகோணமலை)

உலக வங்கிப் பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹெரோல்ட் தலைமையில் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்து, அங்கு உலக வங்கி நடைமுறைப்படுத்தும் செயற்திட்டங்கள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

இக்குழுவினர் வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில், விசேட கலந்துரையாடலொன்றையும் நடத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)



உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் நேற்று திருமலைக்கு விஜயம் மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் குண்டுப்புரளியால் களேபரம்

## பாங்கொக் பயணம் தாமதம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று அதிகாலை பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்று அதிகாலை பாங்கொக் நோக்கிப் புறப்பட தயாராக நின்ற விமானத்தில் குண்டு இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்தே அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, நேற்று காலை 6.00 மணிக்கு குண்டு வெடிக்கும் என கிடைதத அநாமதேய தொலைபேசித் தகவலை அடுத்து, விமானத்தில் பயணிப்பதற்காக இருந்த பிரயாணிகள 375 பேரும் அவசர அவசரமாக இறக்கப்பட்டு, குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினால் விமானத்தில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. எனினும், இவ்விமானத்தில் குண்டு எதுவும் இருக்கவில்லை. இதனை உறுதி செய்த பின்னர் 6 மணிநேர தாமதத்தின் பின்னர் விமானம் பாங்கொங சென்றதாக விமான நிலைய பாதுகாப்புப் பிரிவின் நிறைவேற்று அதிகாரி காமினி அபயரட்ண தெரிவித்துள்ளார்.

(தி)

# இலங்கையூடாக வெளிநாடு செல்ல முயன்ற 116 பேர் கைது

## 110 பேர் இந்தியர்

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் இலங்கை ஊடாக வெளிநாடு செல்வதற்கு தங்கி இருந்த 116வெளிநாட்டவர்களை திஸ்ஸமகாராம பகுதியில் உள்ள ஹோட்டல்களில் வைத்து பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.


கைது செய்யப்பட்டவர்களில் 110 இந்தியர்களும், 6 பாகிஸ்தானியர்களும் அடங்குவர்.

திஸ்ஸமகாராம பிரதேசத்தில் உள்ள ஹோட்டல்களில் இவர்கள் அனைவரும் தங்கி இருந்ததாக குற்றப்புலனாய்வுப் பிரிவுத் திணைக்களத்தின் சட்டவிரோதமாக வெளிநாடு செல்வோரை தடுக்கும் பிரிவின் பணிப்பாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான டி. எஸ். வை. சமரதுங்க தெரிவித்துள்ளார். (தி)

## அருள் ஒளி வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினால் மாதாந்தம் வெளியிடப்படும் ''அருள் ஒளி'' யின் ஆனி மாத இதழ் வெளிவந்துள்ளது. (தி)



யாழ்ப்பாணம் வெள்ளாந்தெரு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய திரு உலாக் காட்சி.

# போசாக்குணவில் மலம் கலக்கப்பட்டமை நிரூபணம்

(யாழ்ப்பாணம்)

கலேவெல பிரதேசத்தில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் கர்ப்பிணிப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் விநியோகம் செய்யப்பட்ட போசாக்கு உணவில் மலம் கலக்கப்பட்டுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

உலக உணவு அமைப்பின் மூலம் தருவிக்கப்பட்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் கலேவெல பிரதேசத்தில் உள்ள 19 கிராமசேவகர் பிரிவுகளில் கர்ப்பிணிகள், குழந்தைகள் ஆகியோருக்குப் போசாக்கு நிறையுணவு வழங்கப்பட்டது.

இப்போசாக்கு உணவை உட்கொண்ட குழந்தைகள் வயிற்றோட்டம் உட்பட இன்னும்பல நோய்களால் பீடிக்கப்பட்டதை அடுத்து பிரதேசப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் கலேவெல பிரதேச வாசிகள் முறைப்பாடு செய்தனர்.

இம்முறைப்பாட்டை அடுத்து அங்கு வழங்கப்பட்ட போசாக்குப் பொதிகளை அரச சார்பற்ற நிறுவனத்திடமிருந்து கைப்பற்றப்பட்டு சுகாதார இரசாயன பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் வழங்கப்பட்ட போசாக்கு உணவு பழுதடைந்து வண்டுகள் நிறைந்து காணப்படுவதுடன் அவற்றில் 20 வீதம் மலங்கலக்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து தம்புள்ள நீதிமன்ற நீதிவானின் உத்தரவுக்கமைய சுமார் ஏழு தொன் போசாக்கு உணவு புதைத்து அழிக்கப்பட்டது. இவ்வாறான நடவடிக்கையால் அப்பகுதி மக்கள் அவ் அரசசார்பற்ற நிறுவனத்தின் மீது பெரும் அதிருப்தி நிலை கொண்டிருப்பதாக தெரியவருகின்றது. (உ-15)

# யாழ்.பல்கலை அணியை சுவிஸ் அணி வென்றது

(சுண்டுக்குளி)

யாழ்ப்பாணத்தில் இருந்து புலம்பெயர்ந்து சுவிஸில் வாழும் இலங்கைத் தமிழர்களின் சுவிஸ் உதைப்பந்தாட்ட அணிக்கும், நாவாந்துறை சென்மேரிஸ் அணி, யாழ். பல்கலைக் கழக அணி ஆகியவற்றுக்குமிடையில் இரு சிநேகபூர்வ உதைப்பந்தாட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்றன.

சுவிஸ் அணியை எதிர்த்து முதலில் விளையாடிய சென்மேரிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் பெற்று சுவிஸ் அணியை வென்றது. இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் சுவிஸ் அணி பல்கலைக்கழக அணியை 2:1 என்ற கோல் கணக்கில் பெற்று பல்கலைக்கழக அணியை வென்றது.

இவ்விளையாட்டு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக தமிழீழ விடுதலைப் புலிகளின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் மாதுளன், யாழ். உதைப் பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ-110)

## விளையாட்டு

## ஆஸி. வீராங்கனை ஓய்வு பெறுகிறார்

அவுஸ்திரேலிய குறுந்தூர ஓட்டவீராங்கனை ''கெத்தி பிறைமன்'' விளையாட்டுத்துறையிலிருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.

1973 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் பிறந்த இவர்.1984 ஆம் ஆண்டு முதல் ஓட்டப்போட்டி நிகழ்வுகளில் பங்கு பற்றி வந்துள்ளார்.அன்று முதல் தொடர்ச்சியான பல வெற்றிகளை தனது நாட்டுக்கு பெற்றுக் கொடுத்துள்ளதுடன். 2000 ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 400 மீற்றர் ஓட்ட நிகழ்வில் தங்கப்பதக்கம் வென்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-68)

# இலங்கை கிரிக்கெற் அணிக்கு புதிய பயிற்றுவிப்பாளர்

## செய்திகள்

அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெற் வீரரான ''ஜோன்டைசன்'' இலங்கை அணிக்கு புதிய பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 1981 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியில் இடம் பெற்றுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய நியமனத்தின் பின் டைசன் கருத்துக் கூறுகையில், இலங்கை கிரிக்கெற் அணியை முன்நிலைக்கு கொண்டுவரும் சாவால்களை தாம் ஏற்கப்போவதாக கூறியுள்ளார்.

மேலும் இலங்கை அணியை புதிய தொழில் நுட்ப முறையில் கொண்டு முன்நகர்த்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

1954 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆம் திகதி சிட்டினியில் பிறந்த டைசன், 30 டெஸ்ற் போட்டிகளிலும், 29 ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

இவர் முதல் தரப்போட்டிகளில் 10ஆயிரம் ஓட்டங்களுக்குமேல் குவித்துள்ளதுடன், அவுஸ்திரேலிய பிராந்திய அணியான ''நியூசவுத் வேல்ஸ்'' அணிக்கு பயிற்றுவிப்பாளராக கடமையாற்றுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்

(உ-68)

# ஆஸி. அணித் தலைவர் அடுத்த ஆண்டு ஓய்வு

அவுஸ்திரேலியாவின் டெஸ்ற் போட்டிகளுக்கான அணித்தலைவரான ஸ்ரீவ்வோ தாம் 2004ம் ஆண்டு இடம் பெறவுள்ள இந்தியாவுக்கு எதிரான டெஸ்ற் தொடர்பின்னர் ஓய்வு பெறவுள்ளதாக பி.ரி.ஐ செய்தி ஸ்தாபனத்திற்கு தெரிவித்துள்ளார்.

தற்போதைய ''பங்களாதேஷ்'' தொடர் குறித்து தாம் கூடியகவனம் செலுத்தி வருவதாக தெரிவித்திருக்கும் ஸ்ரீவ்வோ. இந்தியாவில் உள்ள அநாதை சிறுவர் இல்லங்களுக்கு தான் கூடுதல் உதவிகளை வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் 200 சிறுவர்கள் கல்வி கற்ககூடிய புதிய பாடசாலை ஒன்றை நிர்மாணிக்கப் போவதாகவும் இவர் கூறியுள்ளார் (உ-68)

# தரப்படுத்தல் வரிசையில் முரளிதரன் முதலிடம்

ஒரு நாள் சர்வதேச துடுப்பாட்ட போட்டிகளின் தரப்படுத்தல் வரிசையில் இலங்கையின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர்''முத்தையா முரளிதரன்'' முதலிடத்தில் உள்ளார். இவர் 893 புள்ளிகளைப் பெற்றுள்ளார் 884 புள்ளிகளைப் பெற்றுள்ள அவுஸ்ரேலியா வேகப்பந்து வீச்சாளார் ''கிளைன் மெக்ரெத்'' 2ஆம் இடத்திலுள்ளார்

தென்னாபிரிக்க பந்து வீச்சாளர் ''சோன் பொலக்'' 883 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும், இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் ''சமிந்தவாஸ்'' 805 புள்ளிகளுடன் 4 இடத்திலும் உள்ள அதேவேளை தென்னாபிரிக்க வீரர் ''மக்கெயநிற்றினி'' 5 ஆம் இடத்தில் உள்ளார்

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் இந்தியதுடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு முதலிடம் கிடைத்துள்ளது. இவர் பெற்றுள்ள புள்ளிகள் 773 ஆகும். 2 ஆம் இடத்திலும, 3 ஆம் இடத்திலும் முறையே மேற்கிநதிய வீரர்களான அணித்தலைவர் பிறைன்லாராவும், கிறிஸ் கெயிலும் உள்ளனர்.

(68)

## கே.சி.சி.சி வெற்றிக்கிண்ண ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்கான கால்,அரை இறுதி ஆட்டங்கள் இவ்வாரம் நடை பெறவுள்ளன.

இன்று சனிக்கிழமை காலை 8.30க்கு மானிப்பாய் பரிஷ் வி.க அணியும்,ஸ்ரான்லி வி.கழக 'டி' அணியும் மோதுகின்ற அதேவேளை, பிற்பகல் ஒரு மணிக்கு ஜெலிஸ்ரார் அணியும் கே.சி.சி.சி.வி.க அணியும் கால் இறுதி ஆட்டத்துக்காக மோதவிருக்கின்றன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30க்கு பற்றீசியன் வி.க அணியும் அரையிறுதி ஆட்டத்திற்காக மோதுகனற அதேவேளை பி.ப ஒரு மணிக்கு சனிக்கிழமை நடைபெறவுள்ள கால் இறுதி ஆட்டங்களில் வெற்றிபெறுகின்ற அணிகளுக்கு இடையிலும் அரையிறுதிப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

(உ-15)

# நல்லூர்ப் பிரதேச சபை நடத்திய உள்ளூராட்சிவாரப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி நல்லூர்ப் பிரதேச சபையால் நடாத்தப்படட போட்டி முடிவுகள் வருமாறு:-

### கட்டுரைப்போட்டி கீழ்ப்பிரிவு

1ம் இடம் - சி.பகலவன் - யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி, 2ம் இடம் - பி.குருபரன் - யாழ். கொக்குவல் இந்துக் கல்லூரி, 3ம் இடம் - ஜெ.கீர்த்திகா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

### மத்தியபிரிவு

1ம் இடம் - ஹ.காஞ்சனா - யாழ். நல்லூர் இந்துத் தமிழ் பெண்கள் பாடசாலை, 2ம் இடம் - செ.சிந்திகா - யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, 3ம் இடம் - ச.சயந்தினி யாழ். நல்லூர் இந்துத் தமிழ் பெண்கள் பாடசாலை.

### மேல் பிரிவு

1ம் இடம் - ச.கிருசாந்தி - யாழ். இந்து மகளிர் கல்லூரி, 2ம் இடம் - சி.சுரேனுகா - யாழ். இந்து மகளிர் கல்லூரி, 3ம் இடம் - ஜெ.ஜெனிற்றா - யாழ். இந்து மகளிர் கல்லூரி.

### பொது அறிவுப் போட்டி மத்திய பிரிவு

1ம் இடம் - த.தவச்செல்வன் - யாழ். நல்லூர் இந்துத் தமிழ்ப் பெண்கள் பாடசாலை, 2ம் இடம் - செ.தனுஜன் - யாழ். மத்தியக் கல்லூரி, 3ம் இடம் - லி.வேணுகாணன் - யாழ். மத்திய கல்லூரி.

### மேற்பிரிவு

1ம் இடம் - கு.கவிதன் - யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி - 2ம் இடம் - சி.சுரேனுகா - யாழ். இந்து மகளிர் கல்லூரி, 3ம் இடம் - ச.கிருசாந்தி யாழ். இந்து மகளிர் கல்லூரி.

### சிறந்த சனசமூக நிலையங்களின் தெரிவு

1ம் இடம் - மனோன்மணி ச.ச. நிலையம் கொக்குவில், 2ம்இடம் - ஞானவீர ச.ச.நிலையம் புகையிரத நிலைய வீதி கோண்டாவில். 3ம் இடம் வீ.நாராயணா ச.ச. நிலையம் கோண்டாவில்.

### துடுப்பாட்டம்

1ம்இடம் - சிவகுரு ச.ச.நிலையம் அணி, 2ம்இடம் - கலைமகள் ச.ச.நிலையம்

### கரப்பந்தாட்டம்

1ம்இடம் - ஞானவைரவர் ச.ச நிலையம், 2ம்இடம் - நல்லூர் வடக்கு ச.ச.நிலைய அணி

### உதைபந்தாட்டம்

1ம்இடம் - சிவகுரு ச.ச.நிலையம் ஏ. அணி,

2ம்இடம் - சிவகுரு ச.ச.நிலைய பி. அணி

### 25வருடசேவை பூர்த்தி கௌரவிப்பு

எஸ்.சிறிதரன் - பிரதம எழுதுநர், திருமதி.பு.சிவலிங்கம் - நிர்வாஉத்தி யோகஸ்தர், த.சிவலிங்கம் - தொ.நு.உ, தி.பிரதாபன் - தொ.நு.உ, திருமதி செள.மகேஸ்வரன் - ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர், கு.மோகன் - மருந்துக் கலவையாளர், இ.இராசதுரை - பொறுப்பதிகாரி.

### சிறந்த சேவையாளர்கள்

சி.தம்பன், கு.கருணாநிதி, கா.பத்மநாதன்.

### பிரதேச சபை முன்னாள் செயலாளர் 35 வருட சேவை

உத்தியோகத்தர் ஊழியர்களின் பதவி உயர்வு அரசாங்க சேவை, நிலையங்களுக்கு இலவச வகுப்பு நடாத்துவதற்கான கௌரவிப்பு சி.சந்திரசேகரம்.

### சிறந்த நடுக்கட்டல் உத்தியோகத்தர்கள்

அ.செந்தூர்ச் செல்வன், செ.கனகநாயகம்.

(உ)

# அரசியல் ஆய்வாளர்களுக்கு பயன்தரும் நூல்

பத்திரிகைத்துறையில் ஆசிரியர் தலையங்கம் என்பது, ஒரு பத்திரிகையின் கொள்கை, நோக்கம் செயற்பாடுகளை வெளிப்படுத்துகின்ற ஒரு அம்சமாகும். அது காலத்துக்குக்காலம் நாட்டில் (உலகில்) ஏற்படுகின்ற அரசியல் பொருளாதார, கலை கலாசார முன்னேற்றங்கள், வீழ்ச்சிகள் போன்ற நிலைமைகளை விமர்சிக்கும் களமாகவும் காலத்தின் கோலத்தை படம் பிடித்துக்காட்டும் கண்ணாடியாகவும் விளங்குபவை.' இன்னும் சொல்வதானால் சமகால நிகழ்வுகளை ஆவணப்படுத்தும் கருவூலமாகவும் அவை திகழ்வதுண்டு.

ஆனால் எழுதப்படுகின்ற எல்லா தலையங்கங்களுமே மேற்கூறிய விதமாக அமைந்து விடுவதில்லை. சிலசமயங்களில் அதிகாரத்திலிருப்பவர்களின் திருகுதாளங்களுக்கு சப்பைக்கட்டு கட்டுபவை யாகவும், சமூக அநீதிகளை மூடி மறைப்பவையாகவும், அதிகாரத்திலிருக்கும் பிரதானிகளுக்கு துதிபாடுபவையாகவும் அமைந்துவிடுவதுண்டு.

ஒரு மக்கள் சமுதாயத்தின் முன்னேற்றம், முன்னேற்றத்துக்காக அவர்கள் எடுக்கும் முயற்சிகள், அந்த முயற்சிகளுக்கு ஏற்படும் முட்டுக்கட்டைகள், அதன்விளைவுகள் போன்றவை தொடர்பான தலையங்கங்களை சர்தாரண காலங்களில் காணலாம். ஆனால் உரிமைப் போராட்டம் ஒன்று நடந்து கொண்டிருக்கும் வேளையில் அந்தப் பகுதிகளில் இருந்தே வெளிவரும் பத்திரிகைகளின் தலையங்கங்கள் எப்படி அமையும்? எப்படி அமைய வேண்டும்?

இவ்விதமான கேள்விகளுக்கு திரு.கோபாலரத்தினம் அவர்களின் இந்நூல் விடையளிக்கின்றது என்று கூறலாம்.

கொழும்பு வீரகேசரி பத்திரிகையில் ஐம்பதுகளில் ஒப்புநோக்காளராக சேர்ந்து, ஆர்வம் ஆற்றல் காரணமாக விரைவிலேயே உதவி ஆசிரியராகி, அக்காலத்து தமிழ் பத்திரிகைத்துறை ஜாம்பவான் கே.வி.




எஸ்வாஸ் அவர்களிடம் தலையங்கம் எழுதும் பயிற்சிபெற்று, பின்னர் ஈழநாடு, காலைக்கதிர், செய்திக்கதிர், ஈழமுரசு, ஈழநாதம், தினக்கதிர் எனப் பல பத்திரிகைகளில் ஆசிரியராக விருந்தும், வேறு பல பத்திரிகைகளில் கதை கட்டுரைகள் வரைந்தும் இலங்கை பத்திரிகையுலகில் தனக்கென ஒரு தனி இடத்தை ஏற்படுத்திக் கொண்டது மட்டுமன்றி இன்று உள்ளூரிலும் வெளியிலும் பத்திரிகைத்துறையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அனேக இளைஞர்களுக்கு முன்னோடியாக விருந்து வழிகாட்டியவர் திரு.கோபாலரத்தினம்.

யாழ்ப்பாணத்தில் நாளேடு

| | |
|---|---|
| நூல் | : அந்த ஒரு உயிர் தானா உயிர்? |
| ஆசிரியர் | : எஸ்.எம்.கோபாலரத்தினம் |
| வெளியீடு | : நிகரி-வெளியீட்டாளர் 24,6/9 இனிசியம் றோட் தெஹிவளை. |
| விலை | : ரூபா-150.00 |

ஒன்றை வெற்றிகரமாக நடத்தமுடியுமாவென்ற கேள்வியை சவாலாக ஏற்றுக்கொண்டு பரீட்சார்த்தமாக 1960ல் கே.சி.ரி.சகோதரர்கள் ஈழநாடு பத்திரிகையை நாளேடாக மாற்றியபோது அப்பத்திரிகை பல ஆண்டு காலம் வெற்றியுடன் வீறுநடைபோட்டமைக்கு திரு.கோபலரத்தினத்தின் பங்கு, பணி மகத்தானது.

எஸ்.எம்.ஜி.கோபு என்ற பெயர்களில் அரசியல் கட்டுரைகளும் ஊர் சுற்றி என்ற பெயரில் பத்தி (Column) கட்டுரைகளும் ஸ்ரீரங்கன் என்ற பெயரில்சிறு கதைகளும் அவர் எழுதியுள்ளார். 'தறி,இனம்' என்ற அவரது சிறு கதைகள் அந்

## திறனாய்வுக் களம்

தக் காலத்தில் பெரும் வரவேற்பை பெற்றிருந்தன.

திரு.கோபாலரத்தினம் தாம் பணிபுரிந்த ஈழநாதம் பத்திரிகையில் எழுதிய இரு தலையங்கங்களுடன் தினக்கதிர் பத்திரிகையில் எழுதிய 58 தலையங்கங்களையும் சேர்த்து நூலாக வெளியிட்டுள்ளார். இவை அனைத்துமே 2001ம் ஆண்டில் எழுதப்பட்டவை ஏனைய ஆண்டுகளில் எழுதிய தலையங்கங்களையும் தெரிவு செய்து இணைத்திருக்கலாம் என்று கூறத்தோன்றுகின்றது.

"இந்தத் தலையங்கங்கள் அந்தந்த சமயத்தில் நிலவிய அரசியல் நிலையை வைத்து எழுதப்பட்டவை" என்று ஆசிரியரே கூறுகின்றார் அத்துடன் ஒவ்வெரு தலையங்கமும் பிரசுரமான திகதியும் கொடுக்கப்பட்

## 'வெரு'

டிருக்கிறது. இது அந்தக் காலத்தைப்பற்றியும் அன்றைய அரசியல் சூழ்நிலையை பற்றியும் ஆராய்பவர்களுக்கு உதவியாகவிருக்கும்.

திரு.கோபாலரத்தினத்தின் நடைமிக எளிமையானது. எவ்வித ஆழமானகருத்தையும் மிக நயமாகச் சொல்லுவதும் அதற்கேற்ப தலைப்பு இடுவதும் அவருக்கே கைவந்தகலை.

கவர்ச்சிகரமான முகப்பு அட்டையுடன் உயர்ரக கடதாசியில் அழகாக அச்சிடப்பட்டுள்ள இந்நூல் அனைவரும் வாசித்து பயன்பெற வேண்டிய ஒன்று. குறிப்பாக அரசியல் ஆய்வாளர்களுக்கு இந்நூல் பெரும் பயன்தரும்.

# மனிதாபிமான உதவிகள்

(ஊர்காவற்றுறை)

பட்டினிக்கெதிரான இயக்கம் ஊர்காவற்றுறை நாரந்தனை தெற்குப் பகுதியில் உள்ள மக்களுக்குப் பல்வேறு மனிதாபிமான உதவிகளை வழங்கவுள்ளது.

இந்த அடிப்படையில், மேற்படி நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கிராம மக்களின் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல்களை மக்களுடன் மேற்கொண்டு வருகின்றனர்.

விவசாய உபகரணங்கள், விவசாய உள்ளீடுகள் கால்நடைகள் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளதுடன், அதற்கான பயனாளிகள் தெரிவு இடம்பெற்றுவருகிறது. (உ-75)

# சந்தேக நபர் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கிளிவெட்டியைச்சேர்ந்த தனபாலசிங்கம் விஜயகாந்தன் என்பவர் திருகோணமலை மேல் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.


திருகோணமலை மேல் நீதி மன்ற நிதிபதி சுப்பிரமணியம் பிரமராசா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது அரச சட்டத்தரணி இவர் மீதான குற்றச்சாட்டினை வாபஸ் பெற்றதனை அடுத்தே இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ரி.86ரக துப்பாக்கி அவற்றுக்கான ரவைகள் என்பனவற்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

# மூளைக்கு வேலை தரும் பயனுள்ள தகவல்கள் நிறைந்தது

## பஞ்சவர்ணக் கதம்பம்

கேள்வி கேட்பவன் விடையை மனதில் வைத்துக்கொண்டு விடை



தைக் கண்டு மகிழ்ச்சியடைதலும் அதேவேளை சிந்திக்க வைப்பதும் இதன் நோக்கம். விடுகதை என்பது விடுக்கப்படவேண்டியது. பெயருக்கேற்ப அதில் புதிரும் அடங்கியிருக்கும். அதைக்கண்டு பிடிக்கும் முயற்சி சிந்தனைக்கு ஒரு பயிற்சி

| | |
|---|---|
| நூல் | : பஞ்சவர்ணக் கதம்பம் |
| ஆசிரியர் | : இ.சிறிஸ்கந்தராசா |
| விலை | : ரூபா-150.00 |

மகிழ்ச்சியூட்டும் ஓர் இனிய பொழுதுபோக்குச் சாதனமாகவும் விளங்குகின்றது. ஒரு வித மரியாதையாக இருக்கும்.

மொத்தத்தில் 120பக்கங்களைக் கொண்ட இந்த நூல் சிறுவர் முதல் பெரியவர் வரை படித்துப் பயன் பெறக்கூடியது என்றே சொல்லலாம். பலவித பயனுள்ள தகவல்களை, வேடிக்கையாகப் பொழுதைப்போக்கக்கூடிய விஷயங்களை மூளைக்கு வேலை கொடுக்கும் புதிர்களை இந்நூலில் ஆசிரியர் எங்கெல்லாமோ தேடிச் சேகரித்துத் தந்துள்ளார் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதே.

தெளிவான அச்சுப்பதிப்பு வாசிப்

# மொறிசியஸ் கடலில் மீன்பிடிக்க இலங்கை மீனவர்களுக்கு அனுமதி

(கொழும்பு)

மொறிசியஸ் தீவுக்கடற்பரப்பில் இலங்கை மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்க அந்நாட்டு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

மீன்பிடி நீரியல் வள அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழுவினர் அந்நாட்டுப் பிரதமருடன் அண்மையில் நடத்திய சந்திப்பின்போது இவ்விணக்கம் காணப்பட்டது.


இச்சந்திப்பின் போது, மீன்பிடித்தொழில் அந்நாட்டு அரசாங்கம் பெற்ற அனுபவங்களை இலங்கைக்கு வழங்கவும் மொறிசியஸ் தீவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மாலுமிகளையும் அவர்களது மீன்பிடிப்படகுகளையும் விடுவிப்பது குறித்தும் இணக்கம் காணப்பட்டது.

மொறிசியஸ் தீவில் இலங்கை மீனவர்கள் மீன்பிடிப்பது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது என மீன்பிடித்துறை அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# சமாதான விளக்கக் கூட்டம் நேற்றுமுதல் ஆரம்பம்

(கொழும்பு)

சாளர் ஜயந்த கருணாதிலக தெரி



சொல்பவனை திண்டாடச் செய்வ தும் அவனுடைய திண்டாட்டத்

மகிழ்ச்சியூட்டும் ஓர் இனிய பொழுது போக்குச் சாதனமாகவும் விளங்குகின்றது. என ஆசிரியர் தனது முகவுரையில் குறிப்பிட்டுள்ளமை நூலை வாசிக் கும் போது பொருத்தமாகவே படு கிறது.

நூலின் தரத்துக்குச் சில விடு கதைகளைத் தவிர்த்திருக்கலாம். மாதர்தமை இழிவு செய்யும் எத னையும் தவிர்த்துக் கொள்ளல் நாம் அவர்களுக்குக் கொடுக்கும்

ளத்தக்கதே.

தெளிவான அச்சுப்பதிப்பு வாசிப்

**க.கணேசலிங்கம்**

பவர்களது கண்களைக்களைப் படை யாமல் செய்கின்றது. ''புத்த கங்கள் எனக்காகச் சிந்திக்கின்றன'' (''Books think for me'') என்றார் சாள்ஸ்லாம்ப். இந்தப்புத்தகத்தையும் இந்த வரிசையில் சேர்க்கலாம்

# நேற்றுமுதல் ஆரம்பம்


(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சமாதான நடவடிக்கைகள் மற்றும் பொருளாதாரத்திட்டங்கள் குறித்து மாவட்ட மட்டத்தில் மக்களுக்கு தெளி வுபடுத்தும் கூட்டம் நேற்று ஆரம்பமானது.

இதன் முதல் கூட்டம் நேற்று பொல நறுவை மாவட்டத்தில் நடைபெற்றது.

கட்சியின் விசேட மறுசீரமைப்பு நடவடிக்கையாகவே இதுமேற் கொள்ளப்படுவதாக கட்சியின் பேச் சாளர் ஜயந்த கருணாதிலக தெரி வித்துள்ளார்.

இக்கூட்டங்களை நடத்துவதன் மூலம், புதிய அங்கத்தவர்களை கட்சியில் சேர்த்தல் அமைச்சர்களை மக்களுடன் நேரடியாக சந்திக்க வைத்து மக்களின் பிரச்சினை களைத் தீர்த்து வைத்தல் உட்பட பல விடயங்கள் குறித்து ஆராயப் படவுள்ளதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார். (தி)



யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலையில் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி உள்ள கப்பயிற்சி ஆசிரிய மாணவர்களால் முதல்முதலாக பாடசாலை மட்டத்தில் சுகாதாரக் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டபொழுது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் மற்றும் பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன், உபஅதிபர், பகுதித்தலைவர், உள்ளகப்பயிற்சி ஆசிரிய மாணவன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.



ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஜி.ரி.சற் அமைப்பினரால் புனரமைக்கப்பட்டு கையளிக்கப்பட்ட வைபவத்தின்போது வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.றெஜினா இருதயநாதன் உரைநிகழ்த்துவதையும், அருகில் புதிய அதிபர் த.வாமதேவன், ஜி.ரி.சற் திட்ட இணைப்பாளர் ஜெர்கன், உடுவில் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன், ஓய்வு பெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர் அ.தற்பரானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தேர்தல் முறையை மாற்றி அமைக்க எதிர்க்கட்சியினர் அடங்கிய குழு

## அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

தற்போதைய தேர்தல் முறையை மாற்றி அமைப்பது தொடர்பாக



எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுஒன்று அமைக்கப்படவுள்ளது என அமைச்சரவை பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், தேர்தல் முறையை மாற்றி அமைப்பது காலத்தின் கட்டாய தேவையாக அமைந்துள்ளது.

குறிப்பாக விருப்புத்தேர்வு தேர்தல் முறையில் மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

தேர்தல் முறையை மாற்றி அமைப்பது தொடர்பான பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்த யோசனைக்கு மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் கரு ஜெயசூரிய பாராளுமன்றத்தில் அங்கீகாரம் வழங்கினார்.

அதற்கான குழுவின் பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவிடமே ஒப்படைக்க வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

குறுகிய அரசியல் தேவைகள் இல்லாத நிர்வாக முறைக்கலாசாரத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# இடைக்கால நிர்வாகத்தை ஆதரிக்கப் போவதில்லை

## அதாவுல்லா அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணங்கள் ஒன்றுபட்டு இருக்கக்கூடாதென நெடுஞ்சாலைகள் போக்குவரத்து அமைச்சர் அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் அண்மையில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும்உரையாற்றுகையில் வடக்கு- கிழக்கில் தமிழ் பேசும் மாகாணங்கள் பல இருக்க வேண்டும். தமிழ்மக்களுக்கு கிடைக்கும் அனைத்து உரிமைகளும் முஸ்லிம்களுக்கும் கிடைக்க வேண்டும்.

முஸ்லிம்களுக்கு சமமான உரிமைகள் வழங்கப்படாவிட்டால் இடைக்கால நிர்வாகத்தை நாம் ஆதரிக்கப் போவதில்லை.வடக்கு-கிழக்கு தனித்தனி மாகாணங்களாக இருப்பதன் மூலமே முஸ்லிம்கள் பயன்பெறமுடியும் எனவும் அவர் கூறியுள்ளார். (உ-8)

## பரு.ஆஸ்பத்திரியில் செயலிழந்துள்ள

# எக்ஸ் கதிர்ப்பிரிவை இயக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் எக்ஸ்றே தொழில்நுட்பவியலாளர் இல்லாமையால் எக்ஸ்றே பிரிவின் செயற்பாடுகள் கடந்த ஒன்றரை வருடங்களாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதனால் இவ் வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் எக்ஸ்றே எடுக்க வேண்டிய நோயாளர்கள் அம் புலன்ஸ் வண்டி மூலம யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்படுகின்றதால், அவர்கள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையை போக்கி நோயாளர்களுக்கு விமோசனம் வழங்கும் முகமாக இவ் வைத்திய சாலைக்கு எக்ஸ்றே தொழில்நுட்பவியலாளரை நியமித்து தர உடன் நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் வடககு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு செயலாளர், வடக்கு-கிழக்கு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரை அவசரமாக கேட்டுள்ளனர். (உ-52)

## புத்தளம் மாவட்டத்தில்

# அரசியல் பழிவாங்கலுக்கு இரு நூறு பேர் இலக்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒன்றரை வருடங்களுள் புத்தளம் மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 200 பேர் அரசியல் பழிவாங்கல்களுக் குள்ளாகியுள்ளதாக, அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணை செய்யும் ஸ்ரீலங்கா சுதந்திர சட்டத்தரணிகள் சங்கம் பிரதிநிதியும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரா பிரிய தர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

அண்மையில் புத்தளம் பிரதேச சுகாதார அலுவலகத்தில் இடம்பெற்ற, அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகள் மற்றும் உதவிகள் தொடர்பாக கலந்துரையாடல் கூட்டத்திலேயே இவ்வாறு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உடல் உள ரீதியாக அரசியல் வாதிகள், கட்சி ஆதரவாளர்கள் ஆகியவர்களால் பாதிப்புக்குள்ளானவர்களால் பொலிஸ் நிலையங்களில் செய்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் எந்த அளவில் முன்னேற்றத்துடன் உள்ள தென்பதைப் பரிசீலனை செய்யும் முகமாகவே இக்கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டது.

அனுராபிரிய தர்ஷன யாப்பா அங்கு மேலும் தெரிவிக்கையில், இவ்வாறு பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நட்டஈடு கொடுக்கப்பட வேண்டும் என்பதைக் கோரி எமது அமைப்பு அரசாங்கத்திற்கு அறிக்கை ஒன்று அனுப்பவுள்ளது. அதற்கு அரசு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் மனித உரிமைமீறல் அமைப்பில் முறைப்பாடு செய்யப்படும். இவ் விடயம் தொடர்பாக சர்வதேச மட்டத்திற்கும் இது பற்றி தெரிவிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ-15)




# செய்தித்துளிகள்

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மாகாண பொதுச்சேவை சிற்றூழியர்களை மாகாண தட்டெழுத்தாளர் சேவையின் வகுப்பு II'ஆ'பிரிவிற்கு பதவியுயர்வு வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி வட-கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சில் நடைபெறவுள்ளது.

மாகாண பொதுச்சேவையின் சிற்றூழியர்களை தட்டெழுத்தாளா சேவைக்கு பதவி உயர்த்துவதற்காக கடந்த ஆண்டு ஆகஸ்டில் நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு, மேற்படி பாட்சைக்கான கடிதங்கள் மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரத்தின் பணிப்புரைக்கிணங்க அனுப்ப வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-15)

## விசேட செயற்குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் விசேட செயற்குழுக்கூட்டம் இன்று சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நிலையியற் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய கோரிக்கைகள் பற்றிய மகஜர் தயாரிப்பது மற்றும் அண்மையில் கல்வி அமைச்சின் செயலராளர், ஆசிரியர் தாபனப்பகுதி சிரேஷ்ட செயலாளர் கே.கஹவத்த, பரீட்சை ஆணையாளர் ஆகியோருடனான சந்திப்பில் நடத்திய பேச்சுக்களின் பெறுபேறுகள், மாகாண கல்வி செயலாளர், ஆளுநருடனான சந்திப்பில் சமர்ப்பிக்கப் படவேண்டிய பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட வேண்டியுள்ளதால், பிரச்சினைகள் உள்ள ஆசிரியர்கள் தமது பிரச்சினைகளை எழுத்தில் சமர்ப்பித்தும் நிர்வாக சபை அங்கத்தவர்கள்,வலயங்களின கிளைக்குழு நிர்வாகிகள் கலந்து தமது பிரச்சினைகளையும் எடுத்துக் கூறு மாறும் வடக்கு-கிழக்கு மாகாண செயலாளர் அ.பாலச்சந் திரன் கேட்டுள்ளார். (உ)

## "வேள்விநெருப்பு" வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இணுவில் கலை இலக்கிய வட்டம் நடாத்தும் ச.வே.பஞ்சாட் சரத்தின "வேள்வி நெருப்பு சிறு கதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 க்கு இணுவில் மத்திய கல்லூரியில், கல்லூரி அதிபர் இணுவைதுரை எங்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொடக்கவுரையை இணுவில் கலை இலக்கிய வட்டத் தலைவர் த.சிவகுமாரனும், சிறப்புரையை செங்கை ஆழியானும், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸும் நிகழ்த்தவுள்ளனர் (உ-15).

## முச்சக்கரவண்டி சில்லுகள் மாயம்

(திருநெல்வேலி)

வீடொன்றில் இரவுவேளை, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் மூன்று சில்லுகளையும் திருடர்கள் கழற்றி எடுத்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம்பருத்தித்துறை தும்பளைப்பகுதியில் கடந்த வியாழனன்று இரவு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-43)

## சைக்கிளில் சென்றவர் மரணம்

(கொழும்பு)

கற்பிட்டியிலிருந்து கொழும்பு நோக்கிச்சென்ற வான் ஒன்று சைக்கிளிலுடன் மோதிக் கொண்டதில் சைக்கிளில் சென்றவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் பலாலி வன்னிய தீவைச் சேர்ந்த எச். எ.ஜானக் திஸாநாயக்க (வயது-21) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரை மோதிய வான் புத்தளம் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (பி-5)

## சட்டமூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இந்திய வம்சாவழித்தோட்டத் தொழிலாளர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கும் சட்ட மூலம் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என பெருந்தோட்ட கைத்தொழில் துறை அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சு அலுவலகத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அவர், இச்சட்டமூலம் பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் சுமார் 1லட்சத்து 70ஆயிரம்பேர் இதனால் நன்மை அடைவர்.

தற்போதைய லயன்வீடுகளுக்கு பதிலாக தனித்தனியான வீடுகளை அமைக்கவும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர்மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## மாணவர் விடுதி புனரமைப்பு

(பருத்தித்துறை)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவர் விடுதி புனரமைப்பு வேலைகள் 27 இலட்சம் ரூபா செலவில் நடைபெறவுள்ளன.

இதற்கான நிதி இலங்கையின் மத்திய மகாவித்தியாலயங்கள் புனரமைப்புத்திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடுதி புனரமைக்கப் பட்ட பின்,இங்கு 50 மாணவர்களும் 50 மாணவிகளும் தங்கி கற்கும் வசதிகள் ஏற்படும் எனவும எதிர்வரும ஜனவரி மாதம் முதல் இவ் வித்தியாலயத்தில் மாணவர் விடுதி செயற்பட தொடங்கும் எனவும வித்தியாலய அதிபர் எஸ்.சேதுரா தெரிவித்தார். (உ-52)

## திடீர்தேடுதலில் 19பேர் கைது

(கொழும்பு)

கிரான்பாஸ் நகரில் நேற்று முன்தினம் இரவு பொலிஸார் மேற்கொண்ட திடீர்தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில் 19பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நகரில் பல தரப்பட்ட சந்தேக நபர்கள் நடமாடுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்தே இத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதென கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (து)

## வெற்றுப்போத்தலை ஒப்படைக்க அறிவுறுத்து

(கொழும்பு)

அரசாங்க மருத்துவசாலைகளில் மருந்துகளைப் பெறும் சுகாதார உத்தியோகத்தர்கள் அவற்றுக்கான வெற்றுப்போத்தல்கள் மற்றும் கொள்கலன்கள் என்பனவற்றை திருப்பி ஒப்படைக்கவேண்டும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கிடையில், வெற்று கொள்கலன்களை திருப்பி ஒப்படைக்க முடியாது எனக்கூறி,கண்டி வைத்திய சாலை தாதியர்கள் நேற்று முன் தினம் ஒரு மணி நேர பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (தி)

## நிர்வாகிகள்தெரிவு

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 46வது வருடாந்த சம்மேளனம் நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டி இலங்கை வர்த்தக ஊழியர்சங்க மண்டபத்தில் நடைபெற்ற போது நடப்பாண்டிற்கான தலைவராக சி.ஜெயதுங்கவும் பொதுச்செயலாளராக பி.பேர்ட்டி இரண வீரகேயும் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைமைப்பீடக்குழுவில் சா.தியாகலிங்கம்,ஸ்ரீ இரங்க நாதன் உட்பட ஐவரும் மத்திய குழு உறுப்பினர்களாக அ.பாலச்சந்திரன், த. சிவபுத்திரன்,எஸ். சந்திரமோகன் உட்பட 35பேரும்தெரிவு செய்யப்பட்டனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத் தலைவராக சா.தியாகலிங்கமும், செயலாளராக அ.பாலச்சந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

## காரை நகரில் இலவச மருத்துவமுகாம்

(காரைநகர்)

காரை நகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் ஆதரவுடன் யாழ். பல்கலைக் கழகமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து காரைநகர் இந்துக் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை இலவச மருத்துவ முகாம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இம்மருத்து முகாமில் கண்பரிசோதித்து கண்ணாடி வழங்கல், நீரிழிவு பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை மற்றும் பொதுப்பரிசோதனைகள் என்பன மேற்கொள்ளப் படவுள்ளன.

இவ் இலவச மருத்துவ முகாமில கலந்து கொண்டு பொதுமக்களை பயன்பெறுமாறு காரைநகர் உதவி அரச அதிபர் வே. சாம்பசிவம் கேட்டுள்ளார். (பி-246)

## இன்று ஒரு தகவல்

# பழிக்குப் பழி

பழிக்குப்பழி. இரத்தத்துக்கு இரத்தம். நமக்கு இவை மிகவும் பழக்கப்பட்டுப்போன வார்த்தைகள். காலம் அப்படி ஆகிவிட்டது. உயிருக்கு விலை மிகவும்குறைந்து போய் விட்டது. மிருகங்கள் ஒன்றையொன்று துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதில்லை. கத்தியால் குத்திக்கொல்வதில்லை. ஆனால் மனிதரோ ஒருத்தரை ஒருத்தர் சூட்டுக்கொல்லுகின்றார்கள். குத்திக்கொல்கின்றார்கள்.

ஒரு மிருகத்திடமிருந்து மனிதனைக்காப்பாற்றுவது சுலபம். ஆனால் மனிதனிடமிருந்து மனிதனை காப்பாற்றுவது கஷ்டம். எந்த நேரத்தில் என்னசெய்வான் என்று கூறு முடியாது. பிறக்கும் பொழுது நல்லவனாக இருக்கும் மனிதன் போகப்போக இப்படி ஆகிவிடுகின்றான் என்று பொறுப்பாகக்கொஞ்சம் சிந்தித்துப்பார்க்கலாமா?

சிறிது காலத்துக்குமுன் சிறுவர்களுக்கான புத்தகம் ஒன்றைப் பார்த்தேன். அதில் நிறங்களைப்பற்றிக்கூறும்ஒரு பக்கத்தில் இலையின் நிறம் பச்சை என்று எழுதியிருந்தது. பக்கத்தில் இலையின் படம் இருந்தது. அடுத்தபடியாக இரத்தத்தின் நிறம் சிவப்பு என்று போட்டிருந்தது. அதற்குப் பக்கத்திலே என்ன படம் போடப்பட்டிருந்தது. தெரியுமா? ஒரு கை விரல் .அதை ஒரு கத்தி வெட்டுகின்றது. விரலில் இருந்து சிவப்பு இரத்தம் கொட்டுகிறது. இது தான் அந்தப் படம். சிவப்பு நிறம் எப்படி இருக்கும் என்று சிறு பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்கின்றனர் இந்த விதத்தில்.

கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் பிஞ்சு மனதில் எப்படி நஞ்சை தூவுகின்றோம் என்று. அந்தப்படத்தை பார்க்கும் சிறு பிள்ளை சிவப்பு நிறம் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்வதைவிட சிவப்பு நிறத்தை பார்க்கவேண்டும் என்றால், கத்தியால் விரலை வெட்டலாம் என்று தான் அதிகமாக தெரிந்து வைத்துக் கொள்ளும். அதற்குப்பிறகேன் அவன் வளர்ந்த பிறகுகத்தியைத் தூக்க மாட்டான்? நாம் இன்றும் கூட என்ன செய்கின்றோம் தெரியுமா? பிள்ளைகளுக்கு விளையாட்டுத் துப்பாக்கியை வாங்கிக்கொடுத்து வேடிக்கை பார்க்கின்றோம். சுடுடா கண்ணா! என்று சொல்லிக் கொடுக்கின்றோம். தீபாவளி வந்து விட்டால் எந்தனை சிறுவர்கள் துப்பாக்கியும் கையுமாக அலைகின்றனர். இவர்கள் ஏன் வளர்ந்த பின்பு தைரியமாக துப்பாக்கியை தூக்கமாட்டார்கள்?

சிறுவர்களுக்கு வீரத்தை ஊட்டுவது தப்பில்லை. வெறியை ஊட்டுவது தான் தப்பு. விளையாடுவதற்காக சிறுவர்களுக்கு பொம்மைகள் வாங்கிக்கொடுத்தால் கூட, சிறிது விபரத்துடன் வாங்கிக்கொடுக்க வேண்டியது பெரியவர்களின் பொறுப்பு. சிறு வயதுமுதலே நல்ல விடயங்களை சொல்லிக்கொடுத்து வளர்த்தால் நாளைக்கு அவர்கள் நன்றாக இருப்பார்கள்.

எங்கள் ஊருக்கு பக்கத்தில் ஒரு பெரியவர் இருந்தார். வள்ளலார் பக்தர் அவர். அவர் கொலை என்கின்ற வார்த்தையைக் கூட தனது வாயால் உச்சரிக்கமாட்டார். ஒருமுறை ஏதோ ஒரு ஊரில் நடந்த கொலையைப்பற்றி பத்திரிகையில் படித்து விட்டு, அவரிடம் சொல்லிக்கொண்டிருந்தேன். அப்போது அவர் தம்பி நமது ஊரில் கூட இப்போது நீ சொன்ன ''அது'' நடந்து விடும் போல் உள்ளது என்றார். அவர் அந்த சொல்லை உச்சரிப்பது போல பாவம் என்று நினைத்தார். இவரைப் போன்ற மனிதர்களும் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கின்றார்கள்.

இந்தக் காலத்து சிறுவனிடம் சென்று ''தம்பி ஒரு கன்னத்தில் யாராவது அடித்தால் மறு கன்னத்தையும் காட்ட வேண்டும்'' என்றேன். அதற்கு அவன் ''இன்னொரு கன்னத்திலும் நான் அடி வாங்குவதில் உங்களுக்கு என்ன அவ்வளவு சந்தோஷம்'' என்கிறான். பெரியவர்கள் எதற்காக இவ்வாறு கூறினார்கள் என்று விளங்கிக்கொள்ள முடியாதளவுக்கு வந்துவிட்டோம்.

நாலடியாரில் ஒரு பாடல் உண்டு. பெரியவர்களை பார்த்து சிறியவர்கள் ஏதாவது தவறாகப்பேசி விட்டால், அதற்காக அவர்கள் திருப்பிப் பேசமாட்டார்களாம். கீழ் மக்களுக்கு எதிராக மேன் மக்கள் ஒரு போதும் தாழ்வான சொற்களை பேசமாட்டார்கள் எனவும், ஒரு நாய் நம்மைக் கடித்து விட்டால் நாம்திருப்பி அந்த நாயை கடித்து விடுகின்றோமா என்றும் கூறுகின்றது. அந்தப்பாடல்

''கூர்த்து நாய் கௌவிக் கொளக்கண்டு தம் வாயால்
பேர்த்து நாய் கவ்வினார் ஈங்கில்லை - நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியாக்கல் சொல்பவோ
மேன் மக்கள் தம் வாயால் மீட்டு''

அதனால் பழிக்கு பழி இரத்தத்துக்கு இரத்தம் எல்லாம் நமக்கும் வேண்டாம். நாளைய தலைமுறைக்கும் வேண்டாம். ஒருவர் கேட்டாராம் ''அதோ அந்த ஆள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்? அதற்கு மற்றவர் கூறுகின்றார். ''ஒன்றுமில்லை. செருப்பு அவரது காலை கடித்து விட்டதாம். அதனாலே பழிக்குப் பழி வாங்குகின்றேன் என்று. கூறி இவர் அந்தச் செருப்பை திருப்பிக் கடிக்கின்றாா'' என்றார்.

இந்தக்காலத்தில் இப்படி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சாத்வீக அமைதிப்படை இவ்வாண்டின் பிற்பகுதியில் இலங்கை வருகிறது

(கொழும்பு)

ஐரோப்பாவை தளமாகக் கொண டியங்கும் அமைதிகாப்பு நிறுவனமான சாத்வீக அமைதிப்படை (எம்.பி.) அனைத்து நாடுகளிடமிருந்து திரட்டப்பட்ட குடிமக்கள் 50பேர்களை கொண்ட அணி ஒன்றை இலங்கைக்கு அனுப்பவிருக்கிறது. இவ்வாண்டின் பிற்பகுதியிலிருந்து 2005ஆம் ஆண்டுவரை இந்த அணி இலங்கையில் தங்கியிருந்து நிரந்தர சமாதானத்திற்கு வழிவகுக்கக்கூடிய பணிகளில் ஈடுபடவுள்ளது.

உள்நாட்டில் இருதரப்பினருக்குமிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், நிரந்தர சமாதானத்திற்கான வலுவான அடித்தளத்தை இடுவதற்கும் உழைத்து வரும் சமாதான பணியாளர்களுக்கு ஆதரவாகவும், பாதுகாப்பளிக்கும் விதத்திலும் இதன் செயற்பாடுகள் அமையவுள்ளன. எதிர்காலத்தில் வேறும் சண்டைப் பிரதேசங்களுக்கும் தமது சேவையை வழங்கும் விதத்தில் தமது திறன்களை வளர்த்துக்கொள்வது இதன் நோக்கமாகும்.

அமைதிப்படை ஒன்றின் முன்னோடித்திட்டமொன்றுக்கு இலங்கையின் நிலைமைகள் பொருந்துகின்றன. 17வருடங்கள் போராடி மக்கள் சலித்து விட்டனர். சிறுவர்கள் போர்வீரர்களாக அணி திரட்டப்படுகின்றனர். இலட்சக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுடிருக்கின்றன. நடைபெற்று வரும் சமாதான பேச்சுக்கள் ராஜதந்திர மட்டத்திலேயே நடைபெறுகின்றன. இந்நிலையில் போர்நிறுத்தத்தை நிரந்தரமாக பாதுகாக்கவல்ல. அடிமட்டத்தளம் ஒன்று அவசியமானது என்று பல்வேறு தரப்புக்களும் கருத்து வெளியிட்டுள்ளன.

இந்த சாத்வீக அமைதிப்படை இலங்கையில் இப்போது இயங்கும் இரண்டு அமைப்புக்களான பெபரல் மற்றும் மனிதாபிமான நிறுவனங்களின் ஒன்றியம் (சி.எச்.எ.) ஆகியவற்றுடன் கூட்டை எற்படுத்திக் கொண்டுள்ளது. இந்த 50 குடிமக்கள் அணியானது தெரிவு செய்யப்பட்ட 16 தளங்களில் இயங்கவுள்ளது.

அதிகம் பாதிக்கப்படக் கூடியதான இடங்களில் பாதுகாப்புக்கு உகந்த விதத்தில் இவர்கள் சமுகமளித்திருப்பர். அதிகளவு உயிர் ஆபத்தை எதிர் நோக்குவோர் இக்குழுக்களுடன் இணைந்து நடமாடலாம்.

அதேவேளை, மனித உரிமை மீறல்களையும் இக்குழு கண்காணிக்கவுள்ளது.

மேற்படி நிகழ்ச்சித் திட்டம் 2006ஆம ஆண்டுடன் முடிவுறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## ''வற் வரி'' எதிர்பார்ப்பை நிறைவேற்றவில்லை

# அடுத்த வரவு செலவுத் திட்டத்தை பூர்த்தி செய்வதில் அரசுக்குச் சிக்கல்

(கொழும்பு)

வற் வரி மூலம் எதிர்பார்க்கப்பட்ட 2ஆயிரம் கோடி ரூபாவை தேசிய வருமான வரித் திணைக்களம அரசாங்கத்திற்கு பெற்றுக்கொடுக்கத் தவறிய குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை தொடர்பாக பிரதமர் நிதியமைச்சின் செயலாளரிடம் விளக்கம்கோரியுள்ளார்.

வற்வரி மூலம் அரசாங்கத்திற்கு 2 ஆயிரம்கோடி ரூபா பெற்றுத்தர முடியும் என கடந்த வரவு செலவுத் திட்டத்தின்போது தேசிய வருமான வரித் திணைக்களம் அரசிற்கு உறுதியளித்திருந்தது.

இதற்கமைய அனைத்து வரி இலாபத்தின் மூலமும் மேற்படி தொகையை அரசிற்கு பெற்றுக் கொடுக்க முடியாமல் போயுள்ளதாக தேசியவருமான வரித் திணைக்களம் கடந்த வாரம் அரசிற்கு தெரிவித்திருந்தது.

அத்துடன், எதிர்பார்த்த வகையில் வற்வரி பெறமுடியாது போயுள்ளதாகவும் இதனால் நிதிக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் மேற்படி திணைக்களம் தெரிவித்தது.

இதனால், அடுத்த வரவு செலவுத திட்டத்தை பூர்த்தி செய்வதில் அரசாங்கம் பெரும் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது.

இதனை அடுத்தே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்தையிடம் மேற்படி விளக்கம் கோரியுள்ளார். (உ-10)

## இராசி பலன்

**19.07. 2003**
**(ஆடி 03, சனி)**
சஷ்டி - பி.இ. 12.27வரை
உத்தரட்டாதி-பி.இ. 4.38வரை
இராகுகாலம்- 9.01-10.31
சுபநேரம்- 3.01-.4.31

**மேடம்**
சோம்பல் நிலை, காரியதாமதம், போசன சுகம், சுபசெலவு.

**இடபம்**
குடும்ப மகிழ்ச்சி, வருமானம் அதிகரிக்கும், உற்சாகம், காரிய அனுகூலம்.

**மிதுனம்**
பெரியோரால் மதிக்கப்படுதல், நல்ல பிரயாசை, பிறருக்கு உதவுதல், முயற்சி கைகூடும்.

**கடகம்**
எதிர்பாராத செலவு, பிரயாணம், உடல் நலக்குறைவு, கலகம்.

**சிங்கம்**
அஜீரணகோளாறு, எதிர்பாராத பிரச்சினை, காரியதடங்கல், தர்மம்.

**கன்னி**
களஷ்திர நன்மை, தொழில் முன்னேற்றம், தனஇலாபம், முயற்சி கைகூடும்.

**துலாம்**
தேகநலன், புதிய மாற்றம், தொழில் வருமானம், காரியம் கைகூடும்.

**விருச்சிகம்**
புத்திரரால் கவலை, பிரயாண இடையூறு, பணத்தட்டுபாடு, காரியதாமதம்.

**தனுசு**
மாதாசுகம், பெரியோரால் வேறுக்கப்படல், தனவிரயம், முயற்சி கைகூடும்.

**மகரம்**
மனோதைரியம், கூட்டு முயற்சி, கௌரவமான நிலை, பிரயாண நன்மை.

**கும்பம்**
அதிகசெலவு, போசன சுகக்குறைவு, காரியதாமதம், யோகநிலை.

**மீனம்**
வெகுமானம்,நல்ல முயற்சி, சிந்தனை மிகுதி, விருந்துபசாரம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

## காரைநகர்

# தோப்பூரில் கிணறுகள் வற்றி குடிநீர் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் தோப்பூர் கிராம குடிதண்ணீர் கிணறுகள் வற்றி விட்டதால்,அங்கு குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருவதாக யாழ். செயலக வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக் காலமாக எரித்து வரும் கடும்வெயிலால் இக் கிணறுகள் முற்றாக வற்றி விட்டதால்,அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால் இப்பகுதி மக்களுக்கு குடிநீர் பவுசர்கள் மூலம் நீரை வழங்குமாறு காரைநகர் பிரதேச செயலகத்திற்கு உத்தரவிட்டதைத் தொடர்ந்து இவ் நீர் வழங்கல்கள் நடைபெற்று வருகிறது.

நிரந்த நீர் வசதியை பெற்றுக் கொடுப்பதற்காக யாழ். செயலகம், சமூக நலன்துறை அமைச்சிடம் நிதியுதவியை கோரியுள்ளது.

இப்படியான நீர் வற்றல் இங்கு வருடந்தோறும் நடைபெற்றாலும் இம் முறை மிகமோசமான முறையில் கிணறுகள் வற்றியுள்ளதாக தெரியவருகிறது. (பி-4)

# புலிகளின் பொறுமைக்கு பொது அமைப்புகள் பாராட்டு

(கிளிநொச்சி)

இலங்கைக் கடற்படையினர் மற்றும் படையினரின் அடாவடித்தனங்கள், ஆத்திரமூட்டும் செயல்களுக்கு மத்தியில் சமாதானத்தை முன்னெடுக்கும் நோக்கில் விடுதலைப்புலிகள் அமைதிபேணி வருகின்றனர்.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை யில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில்மேலும்,

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒன்றரை கழிந்த நிலையிலும் உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் எதுவும் இதுவரை அரசினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மன்னார் மாவட்ட அரசஅதிபர் மற்றும் அரச சார்பற்ற நிறவனங்கள்,பொது அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோர்க்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ-[illegible])

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி,வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் கட்டுடை விநாயகர் மைதானத்தில் நடாத்தி வரும் தாச்சிச்சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4.30 மணிக்கு சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீவிளையாட்டுக்கழகமும், சுன்னாகம் கலைவாணி விளையாட்டுக்கழக

## சிறுவிளம்பரம்

**SPOKEN ENGLISH**

அறுமாத காலத்தில் ஆங்கிலத்தில் சரளமாக கதைக்கப்பில, புதிய பிரிவு ஆரம்பம். திங்கள், செவ்வாய், புதன், வியாழன் காலை 9மணி. ஆசிரியர் நவிலேஸ்வரன் ஆசாரி, பிளாக்கர் வீதி, சங்கானை. (7307)

## மரம்நாட்டு விழா

(பருத்தித்துறை)

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின ஏற்பாட்டில் உள்ளூராட்சி வாரத்தையொட்டிய மரம் நாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

இவ்விழாவிலே பருத்தித்துறை நகரசபைச்செயலாளர் திருமதி கமலா திருச்செல்வநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மரம் நாட்டும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

பருத்தித்துறை உத்தியோகப் பற்று பிரிவின் என்.தங்கராஜா, இளைப்பாறிய உத்தியோகத்தர் எஸ்.வேலும்மயிலும் உட்பட பல கிராமியத்தலைவர்களும் மக்களும் இம்மரம் நாட்டும் விழாவிலே கலந்துகொண்டனர்.

(உ-52)

## நாகர்கோவில் ச.ச.நி.வி.க சம்பியன்

(பருத்தித்துறை)

உளளூராட்சி வாரத்தையொட்டி பருத்தித்துறை பிரதேசசபையினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் நாகர்கோவில் சனசமூக நிலைய விளையாட்டுக் குழு சம்பியனானது.

பருத்தித்துறை, திக்கம் மத்திய சனசமூகநிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இக்கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட பிரதேசசபைச் செயலாளர். ஏ.ஏ.நடராஜா ஆரம்பித்துவைத்தார்.

(உ-52)

## கலைவிழா

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேசசபையின் உளளூராட்சி வார கலைவிழா எதிர்வரும் 20ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிரதேச சபை தலைமை அலுவலகமேல் மாடிச் சிறப்பு மண்டபத்தில் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பசுபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலைவிழாவிலே வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலர் வி.வீரபத்திரபிள்ளை, யாழ்.பிராந்திய உளளூராட்சி உதவி ஆணையாளர். ரி.வி.கிருஷ்ணசாமி ஆகியோர் பிரதம விருந்தினராகவும் சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவர் கே.குணசிங்கம் விடுதலைப்புலிகள் வடமராட்சி அரசியல்துறைப் பொறுபபாளர் ஆர்.தயா, பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை, வடமராட்சி தெற்கு - மேற்கு பதில் பிரதேச செயலர் ஆர். சிவபுண்ணியம், பருத்தித்துறை பிரதேச சபைச்செயலர். ஏ.ஏ.நடராஜா, கரவெட்டி சமூகஅபிவிருத்தி உத்தியோகத்தர். வி.சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்ப விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ-52)

## விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சென் தோமஸ் சனசமூகநிலைய முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று கலட்டி றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை மைதானத்தில் திருமதி ஜெ.மேரிறோஸ் தலைமையில் நடைபெறவுள்ளது

நிகழ்வில் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு பயஸ் இருதயதாஸ் அடிகளார் பிரதம விருத்தினராகவும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஏ.சிவசுவாமி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர் (உ-52)

### நூற்றுக்கணக்கான குடாநாட்டு குடும்பங்கள்

# மீளக்குடியமரும் சூழ்நிலை இன்மையால் மன்னார் முகாம்களில் தொடர்ந்தும் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து மன்னார் அகதி முகாம்களில் வாழும் நூற்றுக்கணக்கான மக்கள் தமக்குச் சொந்த இடங்களில் சென்று வாழக்கூடிய இயல்பான சூழ்நிலை இல்லாமையாலேயே தொடர்ந்தும் முகாம்களில் தங்கியிருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர் சேவை கடந்த 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை மன்னாரில் இடம் பெற்றது. இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இவ் இடம்பெயர் சேவையை ஆற்றவென இடம்பெயர்ந்தோர் சேவைத் திட்டத்தின் யாழ்.மாவட்ட அதிகாரி வி.வேளினி புத்தளம் மாவட்ட அதிகாரி நிமாலி ஆஷா பெர்னாண்டோ, மன்னார் மாவட்ட அதிகாரி ஏ.எஸ்.எம்.றைஸ் திருமலை மாவட்ட அதிகாரி வி.மணிவண்ணன் மட்டக்களப்பு மாவட்ட அதிகாரி க.கபிலன் வவுனியா மாவட்ட அதிகாரி ஜெயந்தி ஆகியோர் மன்னாரில் உள்ள மடு, தட்சணா மருதமடு, பேசாலை ஆகிய முகாம்களுக்குச் சென்றிருந்தனர்.

அகதிமுகாம்களில் வாழும் மக்கள் மேலும் கூறுகையில்,

யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட போரினால் இடம்பெயர்ந்து இங்கு அகதி முகாம்களில் இன்னலுறுகின்றோம்.

தற்போதுள்ள சமாதானச் சூழ்நிலையிலும் எமது சொந்த இடங்களுக்குச் சென்று மீள் குடியேற முடியாதுள்ளமைக்கு காரணம், எமது வாழ்விடங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதே.

அத்துடன், தற்போதுள்ள அரசியல் முரண்பாடுகளால் மீண்டும் யுத்தமும் இடம்பெயர்வுகளும் ஏற்படுமாயின் எமது பிள்ளைகளின் கல்வி உட்பட சகல வாழ்வியல் சூழ்நிலைகளும் பாதிக்கப்படலாம். இத்தகைய காரணங்களாலேயே நாம் மீள் குடியேறமுடியாதுளளோம் என்றனர்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும் வரை எமது மீள் குடியேற்றம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (உ-4)

# மத்திய அரசின் கொள்கைகள் — தமிழ் மாணவர் கல்விக்குத் தடையாகவுள்ளன

(புத்தளம்)

மத்திய அரசு சுற்றுநிருபங்கள் மூலம் பிறப்பித்துள்ள நிபந்தனைகள் காரணமாக மாகாண சபையால் புதிய நியமனங்களை வழங்க முடியவில்லை. அதற்கு மத்தியிலும் வடமேல் மாகாணத்தில் தமிழ் மொழி மூல ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுவது பெரும் சாதனையாகும் என்று வடமேல் மாகாண முதலமைச்சர் சுட்டத்தரணி அதுல விஜேசிங்க தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 53 பேருக்கு தமிழ் மொழி மூல ஆசிரிய நியமனங்கள் வழங்கும் வைபவம் புத்தளம் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

புதிதாக வழங்கப்படுகின்ற ஆசிரிய நியமனங்களுக்காக நாமும் அதிகாரிகளும் கடும் பிரயத்தனம் எடுத்துகொண்டோம். மாகாண சபையில் நாம் பொறுப்பேற்ற போது புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் ஆயிரத்து 200 தமிழ் மொழி மூல ஆசிரிய வெற்றிடங்கள் நிலவின. அவற்றைப் படிப்படியாகக் குறைத்து தற்போது 50வீதமான தமிழ் மொழி மூல ஆசிரிய வெற்றிடங்களே எஞ்சியுள்ளன.

மாணவர்களின் கல்விக்கு உரமூட்டுவதற்காக புதிய நியமனங்களை வழங்க நாம் தயார். ஆனால், மத்திய அரசின் கொள்கைகள் தான் அவற்றைத் தடுத்து வருகின்றன. எனினும தொடர்ந்தும் தமிழ் மொழி மூல ஆசிரியர்களை நியமிக்க என்னாலான அனைத்து வகையான முயற்சிகளையும் செய்வேன் என்றார்.

வடமேல் மாகாண சுகாதார சுதேச வைத்திய சமூக நலன்புரி அமைச்சர் எம்.எச்.என்.நவவி அங்கு உரையாற்றுகையில்,

மாணவர்களின் கல்வி பாதிக்கக்கூடாது என்பதில் நாம் மிக உறுதியாக இருக்கிறோம். அதற்காகவே கடும் முயற்சிகள் செய்து இந்த ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இத்தொழில் புனிதமானது. அதனை சரிவர ஆசிரியர்கள் நிறைவேற்ற வேண்டும்.

மேலும் 40றகும் மேற்பட்டோருக்கு நியமனங்கள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும என்றார்.

(உ)

# விமான நிலைய வருமானம் ஒப்பீட்டு ரீதியில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் வேலைவாய்ப்புத் தேடிச் செல்லும் புலம் பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகின்றது. இதனால் தற்போது விமான நிலையத்திற்கு கிடைக்கும் வருமானம் கடந்த காலத்தில் கிடைத்த வருமானத்துடன் ஒப்பிடுகையில், அதிகரித்துள்ளதாக தொழில் வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு வருமானத்தை விட இவ்வாண்டின் முடிந்த 6 மாதங்களின் மொத்த வருமானம் அதிகமாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது. 2002ஆம் ஆண்டு 69 கோடியே 8 லட்சத்து 43 ஆயிரத்து 280 ரூபா வருமானத்தை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் பெற்றிருந்த போதிலும் இவ்வாண்டு 6மாதத்திற்குள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் புலம்பெயர்ந்தவர்களினால் 11சதவீதம் அதிகமாகவே இவ்விமான நிலையம் வருமானத்தை பெற்றுள்ளதாக கணிப்புக்கள் மூலம் தெரியவந்துள்ளது. இதேவேளை, புலம்பெயர் தொழிலாளர் மூலம் கடந்த ஆண்டுமுதல் 4மாதத்திற்குள் 412 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைத்துள்ள நிலையில் இவ்வாண்டு முதல் 4மாதங்களில் 457 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இலங்கையின் வருமானம் அதிகரித்துள்ளது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் இவ்வருமான அதிகரிப்பின் மூலம் அத்தொழிலாளர்களின் குடும்பத்தவர்களின் நலன்களைப் பேண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வாண்டு புலம்பெயர் தொழிலாளர்களாக வெளிநாடு சென்ற குடும்பத்திலுள்ள ஆயிரத்து 810 மாணவர்களுக்கு 36கோடியே 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான புலமைப் பரிசில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சுசந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (உ-15)

# நியூசிலாந்து நாட்டுடனான நாய்ப் பிணக்கு வலுப்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து அனுப்பப்பட்ட வளர்ப்பு நாய்க்குரிய விமானக் கட்டணத்தின் 10 மடங்கை நியூசிலாந்து அரசு இலங்கைக்கு வழங்க வேண்டுமென இலங்கை அரசு கேட்டுள்ளது. அத்துடன் அனுப்பப்பட்ட வளர்ப்பு நாயையும் திருப்பி அனுப்பும் படியும் கேட்டுள்ளது.

நான்கு தினங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்து நியூசிலாந்துக்கு நாயொன்று விமானம் மூலம் அனுப்பப்பட்டது. ஆனால் அந்த நாயை ஏற்தற்கு நியூசிலாந்து மறுத்து விட்டது. போதிய தஸ்தாவேஜுகள இல்லை என்பதே இதற்குக் காரணம் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாயை அனுப்புவதற்கு 50டொலாகள் செலவானது. ஆனால், நாயை ஏற்க மறுத்ததால் இந்தத் தொகைய்ய 10மடங்காக வழங்குமாறு நாயை நியூசிலாந்துக்கு அனுப்பியவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, இந்த நாய் விவகாரம் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவுக்கு கேட்டை உருவாக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

# ஏ—9 வீதி முழுநாள் பாவனை குறித்து ஐ. சி. ஆர் . சிக்கு எதுவும் தெரியாது

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியை 24 மணிநேரமும் திறப்பது குறித்து த்மக்கு எந்த விதமான உத்தியோகபூர்வமான கோரிக்கையும் கிடைக்கவில்லை என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 29ஆம் திகதிமுதல் ஏ-9 வீதி போக்குவரத்திற்காக 24 மணி நேரமும் திறக்கப்படவுள்ளதாக வெளியான செய்தி குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தரப்பிடமோ அன்றி விடுதலைப்புலிகள் தரப்பிடமோ இருந்து இற்றைவரை தமக்கு இது விடயமாக கோரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என தெரிவித்த அந்த அதிகாரி மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டால் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்பதையும் தெளிவுபடுத்தினார்.

இதேவேளை, ஏ-9 பாதையை 24மணிநேரமும் திறப்பதற்குத் தடையாகவிருந்த மின்வெளிச்சம் இல்லாமையை போக்க ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்திருப்பதாகவும்,

முகமாலை முதல் பளை வரையான பகுதிக்கு மின்சாரம் வழங்க 2 கோடி ரூபாவும் ஓமந்தை முதல் புளியங்குளம் வரை மின்சாரம் வழங்க 2கோடியே 20 லட்சம் ரூபாவும் தேவையென மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)



யாழ். கரணவாய் பொன்னம்பல வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளிலே பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தத்தின் பாரியார் திருமதி அருளானந்தம் வெற்றிபெற்ற வீரர்களுக்கான பரிசில்களை வழங்குகிறார். (பரு.நிருபர்)

# உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஆங்கில டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்களுக்கு உடன் ஆசிரிய நியமனம் வழங்க இணக்கம்

(கொழும்பு)

ஆங்கில ஆசிரிய வெற்றிடங்கள் அதிகமாக இருப்பதால் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களை ஆசிரியர்களாக உடன் நியமிக்க வேண்டும் என்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் கல்வி அமைச்சின் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் சி.ஜெயதுங்க அண்மையில் கல்வி அமைச்சின் செயலாளர் ஆசிரியர் தாபனக் கிளையின் சிரேஷ்ட செயலாளர் க.கஹாவித்த ஆகியோரைச் சந்தித்து 10 அம்சக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவை பற்றி பரிசீலிக்கப்பட்ட பின்னர் அனைத்துக் கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இணக்கம் காணப்பட்ட ஏனைய விடயங்களாவன,

* தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் உள்ள அதிபர் வெற்றிடங்களுக்கு 1999ல் நடைபெற்ற போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் அதிபர் சேவை தரம்I,II என்பவற்றுக்கு 500 பேரை உள்வாங்க அமைச்சர் அனுமதித்துத் திறைசேரிக்கு சிபார்சு செய்துள்ளார். திறைசேரியின் அனுமதி கிடைத்ததும் நியமனங்கள் வழங்கப்படும்.

* 2003 யூன் 19ஆம் திகதிக்கு முன் பயிலுநர் ஆசிரியராக நியமிக்கப்பட்டவர்களை ஆசிரிய சேவை 3II, 3I இற்கு உடனடியாக அவர்கள் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து உள்வாங்குதல், பட்டதாரிகளை அவர்கள் பட்டம் பெற்ற திகதியிலிருந்தும் அவர்களுக்கு உரித்தான வகுப்பில் உள்வாங்குதல்.

* கடந்த காலங்களில் ஆசிரியர் தெரிவின்போது க.பொ.த (உ/த) பரீட்சை வெட்டுப்புள்ளி அடிப்படையில் விஞ்ஞானக் கணித துறைகளில் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பைச் சுட்டிக்காட்டி விரைவில் வெளியிடப்படவுள்ள வர்த்தமானி அறிவித்தலில் ஆசிரியர் தொகை வெற்றிடமாகவுள்ள துறைகளின் பாட அடிப்படையில் வெட்டுப் புள்ளிகளின் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

* ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் உள்ள பயிற்சி ஆசிரியர்களின் உள்வாங்கலையும் உடன் செய்து அவர்களது நிலுவைப் பணங்களையும் உடன் வழங்க வேண்டும்.

* பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம், பாடரீதியில் உள்ள வெற்றிட அடிப்படையில் விண்ணப்பம் கோரப்படவேண்டும்.

* வடக்கு-கிழக்குத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் உள்ள தமிழ் மொழி மூலம் பாடசாலைகளில் ஏற்படும் வெற்றிடங்களுக்குப் போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து தேவையான ஆசிரியர்களை வடக்கு-கிழக்கில் இருந்து தெரிவு செய்ய வேண்டும்.

* யாழ் தேசிய கல்விக் கல்லூரியில் விசேட கல்விக்கான ஆசிரியர் பயிற்சியை இம்முறை ஆரம்பிக்க வேண்டும்.

* ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் அதிகமாக இருப்பதால் உடனடியாக உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஆங்கில டிப்ளோமா பெற்றவர்களை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும்.

* ஆங்கில மொழிமூலக் கல்வியை 6ஆம் தரத்தில் புகட்டும் பாடசாலைகளுக்கு பாடப்புத்தகங்கள் உடனடியாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

* வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 2000ற்கும் அதிகமான ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளதால், க.பொ.த (சா/த) பரீட்சையில் விசேட சித்தியை ஆங்கிலத்தில் பெற்றவர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளித்து முன்னர் டி.இ.எல்.ஐ.சி போன்ற நெறியொன்றை ஆரம்பித்து அவர்களுக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்து ஆசிரியராக நியமித்தல். (உ)

## கரபந்தாட்டப்போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாகர் கோயில் சனசமூக நிலைய விளையாட்டுக் குழு சம்பியனானது.

மேலைப் புலோலி நகர காவலர சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற இக்கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியிலே திக்கம் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் குழுவை எதிர்த்து நாகர்கோயில் சனசமூக நிலைய விளையாட்டுக் குழு மோதியது. பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் இவ்விளையாட்டுப் போட்டியிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கரபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். (உ-52)

## திருவிழா

(கொழும்புத்துறை)

பாண்டியன்தாழ்வு புனித் அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாட்களாக நடைபெறவுள்ள இத்திருவிழாவில் தினமும் மாலை 5 மணிக்கு விசேட வழிபாடுகள் நடைபெறவுள்ள அதே வேளை, எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை விழாவும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாட் திருப்பலியும் இடம்பெறவுள்ளது. (உ-51)

## கடைசி நேரத்தில் காலை வாரினார் ஜனாதிபதி

# 12 லட்சம் பேருக்கு காணி வழங்கும் அமைச்சர் ராஜிதவின் திட்டம் பிசுபிசுப்பு

(கொழும்பு)

காணி வசதிகள் இல்லாதவர்களில் 12 லட்சம் பேருக்கு காணி



உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க வழி வகுக்கும் திட்டம் மேலும் தாமதமாகும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுபற்றி காணி அமைச்சர் ராஜித சேனாரத்னா கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த புதனன்று இது சம்பந்தமான யோசனைகளை அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைத்தபோது, அதற்கு தமது ஆட்சேபத்தைத் தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செய்திக்குறிப்பொன்றை அனுப்பி வைத்திருந்தார்.

இதனால் காணி வசதிகள் அற்றவர்களுக்கு காணி உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க வழி வகுக்கும் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

இதற்கு முன்னரும் இவ்வாறு நடந்துள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதியும் காணி உறுதிகள் சம்பந்தமான பிரேரணை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டன. அப்போதும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதில் சில நடைமுறைச் சிக்கல் இருப்பதாக தெரிவித்து, இதில் கைச்சாத்திடவில்லை.

பின்னர் ஜனாதிபதியின் செயலாளரும் எனது செயலாளரும் இதுபற்றிக் கலந்துரையாடியதன் பிரகாரம் ஜனாதிபதி இந்தப் பிரேரணையில் கைச்சாத்திட இணங்கினார்.

இருந்தாலும், அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த யோசனை தொடர்பாக ஜனாதிபதி உடன்பட மறுத்துவிட்டார்.

இவ்விடயத்தில் தமது கையொப்பம் மாத்திரம் இருந்தால் போதும் என்றே ஜனாதிபதி கருதுகின்றார். இது அரசியல் இலாபம் கருதிய செயலாகும்.

இதுபற்றி ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விளக்கிக் கூறவிருந்தேன். ஆனால் அவர் இக்கூட்டத்திற்குச் சமுகமளிக்கவில்லை



என்றார்.

இதேவேளை, இந்த யோசனை மூலம் அமைச்சர் ராஜித சேனாரத்னா தனது அதிகாரங்களைக் குறைத்து மதிப்பிட முனைகிறார் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

அரசியல் யாப்பு சீர்திருத்தம் இல்லாமல் காணி உரிமைச் சான்றிதழில் கைச்சாத்திடுவதற்கு எனக்குள்ள அதிகாரங்கள் பற்றி காணி அமைச்சர் கேள்வி எழுப்ப முடியாது.

அத்துடன் மேற்படி பிரேரணையில் அடங்கியுள்ள சில விடயங்கள் தொடர்பான எனது கருத்துக்கள் உரியவிதத்தில் கவனத்தில் கொள்ளப்படாதமையினாலேயே இதனை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (உ-10)

## இந்து சமுத்திரத்தில் எண்ணெய்க் கசிவு
## இதனால் இலங்கைக்கு நெருக்கடி

(கொழும்பு)

இலங்கையின் கிழக்கு மேற்குக் கடற்பாதையில், இந்து சமுத்திரத்தில் எண்ணெய்க்கசிவு ஏற்படுவது காரணமாக இலங்கை பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுமென மத்திய சூழல் அதிகார சபைத் தலைவர் மானல் ஜெயமான்ன எச்சரிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பேரழிவிற்கான ஆபத்துக்கள் பற்றிய கூட்டமொன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

ஒவ்வொரு நாளும் சராசரியாக 300 பாரிய கப்பல்கள் இலங்கையின் தென்பகுதியை ஒட்டிய கடலில் செல்கின்றன. இதனைவிட இலங்கையை ஒட்டி 500 மில்லியன் மெற்றிக்தொன் எண்ணெய் கொண்டு செல்லும் எண்ணெய் தாங்கிகள் உள்ளன.

இவற்றில் பெரும்பாலானவை தொழில்நுட்பக் குறைபாடுகளுடையவை. [illegible]னியக் கடலில் இரண்டாக உடைந்த 7 ஆயிரம் தொன் எண்ணெய் தாங்கிக் கப்பல் போல இங்கும் நடைபெறாது செய்வதற்கு உத்தரவாதம் இல்லை என்றார்.

இதேவேளை, கடலில் எண்ணெய் கசிவு பற்றிய ஆய்வில் கடல் மாசடைதலை பாதுகாக்கும் பல அமைப்புகள் சேர்ந்து இராணுவம், தரைப்படை, கடற்படை, பொலிஸ், பிரதேச சபை உறுப்பினர்கள், மாவட்ட செயலக அதிகாரிகள் போன்றோரை உள்ளடக்கிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ)

## மாணவர்கள் மத்தியில் மனிதத்தை வளர்க்க
# "பிரஜாவுரிமைப் பயிற்சி" புதிய பாடம் அமுல்
## கல்விஅமைச்சர் தகவல்

(கொழும்பு)

கல்வி அமைச்சு ஒரு புதிய பாடமொன்றை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. பிரஜாவுரிமைப் பயிற்சி என்னும் பெயருடைய இப் பாடம் மாணவர்களுக்கு அறநெறிகளைப் போதித்து அவர்களை எதிர்காலத்தில் கடமை உணர்வுள்ளவர்களாக மாற்றும் என்று நம்பப்படுகின்றது.

கொழும்புப் பொது நூலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு இதனைத் தெரிவித்ததுடன், இது தொடர்பான சில புத்தகங்களையும் வெளியிட்டு வைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

பாடசாலைகளுக்கு இப்பாடம் அடுத்த வருடம் முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதனை மாணவர்கள், ஆசிரியர்களின் துணையின்றித் தாமாகவே சுயமாக கற்றுக்கொள்ள முடியும். இத்தகைய பாடங்கள் இல்லாமை காரணமாகவே மாணவரிடையே ஒழுக்கச் சீர்கேடுகள், மனிதப் பண்புகள் சீர்குலைந்துள்ளன என்பது பல கல்விமான்களின் கருத்தாகும்.

இப்பாடம் சுய கற்றலுக்குரியது. 6ஆம் ஆண்டு மாணவர்களுக்கு முதன்முதலில் இப்பாடம் சேர்த்துக் கொள்ளப்படும். இதற்கான வசதிகள் மாணவர்களுக்கு செய்து கொடுக்கப்படும்.

ஆசிரியர்கள் அடிக்கடி லீவு எடுப்பதாலும் மனித வளப் பற்றாக்குறை காரணமாகவும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களையும் மாணவர்கள் சுயமாகக் கற்றுக்கொள்ளும் முறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். (உ)

## அடையாள அட்டை வழங்கும்
# நடமாடும் சேவையில் பலர் பயன்பெற்றனர்

(காரைநகர்)

ஆள்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை நேற்றுக் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்றது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெற்ற இச் சேவையில் கலந்து கொண்ட 523 பேரில் 292 பேருக்கு ஒரு மாத காலத்தினுள் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளது.

இதில் புதிதாக 161 பேரும் அடையாள அட்டைகளை தொலைத்தவர்களில் 26 பேரும் மாற்றம் செய்வோரில் 95 பேரும் பாடசாலை மாணவர்களில் 10 பேரும் அடங்குவர். (பி-246)


## தரம் 11 மாணவர்களுக்கான
# கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஈழத்து எழுத்தாளர்

அமரர் கணபதி கணேசன் ஞாபகார்த்தமாக

(செம்பருத்தி பப்ளிகேஷன்ஸ் மலேசியா)

கட்டுரையின் தலைப்பு

**கல்வித்துறையில் கணனியின் பங்கு**

போட்டியின் விதிகள்:

தரம் பதினொன்றில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 250சொற்களுக்குள் அமைதல் வேண்டு
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.07.2003ற்கு முன்னதாக "மாணவர் கட்டுரைப் போட்டி" வலம்புரி, 15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

இணைக்கும் பத்திரம்

கட்டுரைப்போட்டி இல-6

மாணவர் பெயர்: ..............................
பாடசாலை முகவரி: ..............................
..............................
கற்கும் தரம்: ..............................

உறுதிப்படுத்துகிறேன்

..............................
ஆசிரியர்.

# ஈராக் யுத்தம் தவறாக நடத்தப்படவில்லை புஷ்-பிளேயர் இருவரும் ஒன்றாக அறிவிப்பு

## காங்கிரஸ் சபையில் பிளேயருக்கு அமோக வரவேற்பு

(வாஷிங்டன்)

**ஈராக்கிற்கு எதிரான யுத்தம் தவறாக மேற்கொள்ளப்படவில்லை என்றும், இந்த நடவடிக்கைகள் குறித்து தங்கள் மீது பழிசுமத்த முடியாது என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷும், பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயரும் ஒன்றிணைந்து தெரிவித்துள்ளனர்.**

அத்துடன், பிரித்தானியப் புலனாய்வுப் பிரிவினரின் உளவு அறிக்கையைத் தாங்கள் முழுமையாக நம்புவதாகவும் ரொனி பிளேயர் கூறியுள்ளார்.

வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர்கள் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதிக்கும் பிரித்தானியப் பிரதமருக்குமிடையே நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.


சதாம்ஹுசைன் ஒரு அச்சுறுத்தலாக இருந்ததன் காரணமாகவே அவருக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கான முழுப் பொறுப்பையும் தாம் ஏற்பதாகவும் தங்களை எவராலும் தவறானவர்கள் என நிரூபிக்க முடியாது எனவும் அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்தார்.

**காங்கிரஸ் சபையில் பிளேயர்**

முன்னதாக பிரித்தானியப் பிரதமர் ரொனிபிளேயர் அமெரிக்க காங்கிரஸ் சபையில் உரை நிகழ்த்தியபோது ஈராக் மீதான போர் எடுப்பு நியாயமானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

காங்கிரஸ் சபையினர் ஆரவாரத்துடனும் 17 தடவைகள் எழுந்து நின்றும் பிளேயரை வரவேற்று மரியாதை செய்தனர். பிளேயர் சபையில் பேசுகையில், ''அமெரிக்கராக இருப்பதென்றால் சுதந்திரமாக இருப்பதென்பதாகும்'' என்று அமெரிக்காவைப் பாராட்டினார். ''அதேசமயம் அமெரிக்கா மற்றவர் களுக்கும் செவி சாய்க்க வேண்டும்" என்றும் எச்சரித்தார்.



''வீழ்த்தப்பட்ட ஈராக்கிய அதிபர் உயிரி மற்றும் இராசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்தார். அவைகளை வைத்தும் இருந்தார். தனது அணுவாயுதத் திட்டத்தை மறுசீரமைப்புச் செய்வதற்கும் அவர் முயற்சி செய்துவந்தார்'' என்று பிளேயர் கூறினார்.

**பிளேயருக்கு அமெரிக்காவின் மிக உயர்ந்த விருது**

மிகவும் நெருக்கடியான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நேரத்தில், அமெரிக்காவுக்கு உறுதியான ஆதரவு வழங்கியமைக்காக அமெரிக்க காங்கிரஸ் சபை பிளேயருக்கு மிக உயர்ந்த சிவிலியன் விருது வழங்கி கௌரவிக்கவிருக்கின்றது. காங்கிரஸ் சபையின் பொன்னாலான பதக்கம் வார்க்கப்படுவதில் ஏற்பட்ட தாமதத்தால் விருது வழங்கும் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. (பி-9)

# பங்களாதேஷில் மேலும் ஒரு படகு கவிழ்ந்தது

## 800 பயணிகளின் கதி தெரியவில்லை

(டாக்கா)

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவுக்கருகில் மற்றுமொரு படகு விபத்து நிகழ்ந்துள்ளது. 300 பேரை மட்டும் ஏற்றிச் செல்லக் கூடிய இப்படகில் 800 பேர் பயணம் செய்ததாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

எனினும் இப்படகு விபத்துக்குள்ளானபோது அதில் பயணம் செய்த 800 பேரினதும் நிலைமை குறித்த உறுதியான தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. தலைநகர் டாக்காவில் இருந்து 70 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஒரு நதியில் கடந்த 10 நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற இதேபோன்றதொரு படகு விபத்தில் 600ற்கும் மேற்பட்ட பயணிகள் பலியாகினர் என்று குறிப்பிட்ட பங்களாதேஷ் அதிகாரிகள், அவ்வாறான விபத்துக்கள் அதிகரிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம் என்று விசனம் தெரிவித்துள்ளனர்.

பங்களாதேஷில் ஆறுகளிலும் நதிகளிலும் சுமார் 20 ஆயிரம் படகுகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றபோதிலும் எண்ணாயிரம் படகுகளே பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர்கள் கூறுகின்றனர். (பி-2)

# அமெரிக்க படைகள் லைபீரியா செல்வதில் உள்ள சிக்கல்

(மன்ரோவியா)

லைபீரியாவில் பாதுகாப்புக் கடமைகளில் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் படைவீரர்கள் ஈடுபட்ட பின்னரே அமெரிக்கப் படைவீரர்கள் அங்கு செல்வார்கள் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்:

மேற்கு ஆபிரிக்க நாடுகளின் படைவீரர்கள் லைபீரியாவின் கேந்திரப் பகுதிகளில் நிலைகொண்டால் மாத்திரமே தங்களால் பாதுகாப்பு நடவடிக்கைகளை விஸ்தரிக்க முடியுமென அதிகாரிகள் கூறியுள்ளனர். (பி-9)

# வேலை நீக்கப்பட்ட ஊழியர்களை மீண்டும் சேர்க்க அவசரம் வேண்டாம்

## தமிழக அரசு அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை

(சென்னை)

வேலை நீக்கம் செய்யப்பட்ட அரச ஊழியர்களை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்வதில் அவசரம் காட்டவேண்டாம் என்று தமிழக அரசு சுற்றறிக்கையொன்றை *அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளது.

அத்துடன், வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள், வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள், தற்போது பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் குறித்த விபரங்களையும் சேகரித்து தமக்கு அனுப்பிவைக்குமாறு துணைச் செயலர்களுக்கு தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதனிடையே வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைமைச் செயலக ஊழியர்கள் சங்கத்தின் அங்கீகாரத்தை ரத்துச் செய்வது குறித்து தமிழக அரசு ஆலோசனை செய்துவருகின்றது. சென்னையிலுள்ள தமிழக அரச வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டுள்ளன.

வேலைநீக்கம் செய்யப்பட்ட அரச ஊழியர்கள் அனைவரும் அடுத்த மாதம் 1ம் திகதி முதல் அவர்களது பணிகளில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (பி-2)

# காஷ்மீரில் மோதல்

## தீவிரவாதிகள் 4 பேர் பலி

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இந்தியப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதல்களில் 4 தீவிரவாதிகள் உட்பட 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் தொடர்ந்து இடம்பெற்ற இம் மோதல்களில் கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் 3 பேர் வெளிநாடுகளைச் சேர்ந்த தீவிரவாதிகளென இனங்காணப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலின் போது அதிகளவிலான ஆயுதங்களும் வெடிமருந்துப் பொருட்களும் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அஸாம் மாநிலத்தில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குஜ்வாமா மாவட்டத்தில் இடம்பெற்ற இதேபோன்றதொரு சம்பவத்தில் ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதியொருவர் கொல்லப்பட்டுள்ளார். (பி-2)



தீவிர கொள்கைப் பிடிப்புள்ள ஜமாயட்-உலேமா-இஸ்லாம் இயக்கத்தின் தலைவர் பாஸல் உர் ரஹ்மான் தலைமையில் பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு வாகா எல்லை வழியாக இந்தியா வந்தது. நல்லெண்ண விஜயமாக இக்குழுவினர் இந்தியா வந்துள்ளனர்.

## கடவுள் பெயரால் இயக்கம்

# கொடூர செயற்பாட்டில் 45 குழந்தைகள் பலி

(கம்பாலா)

உகண்டாவில் செயற்பட்டு வரும் ''கடவுள் பாதுகாப்புப் படை'' என்ற பெயரைக் கொண்ட ஆயுதம் தாங்கிய குழுவொன்று நேற்று முன்தினம் நடத்திய கடத்தல் நடவடிக்கையொன்றின்போது 45 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

அடிக்கடி குழந்தைகளைக் கடத்திச் செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இக்குழுவினருக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் 20 ஆயிரம் குழந்தைகள் மாபெரும் ஊர்வலம் ஒன்றை கடந்த திங்கள் கிழமை நடத்தியிருந்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த கடவுள் பாதுகாப்புப் படையினர் ஊர்வலம் நடத்திய குழந்தைகளில் 45 குழந்தைகளைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இதன்போது ஆறு ஒன்றைக் கடந்து வருமாறு இக்குழுவினர் வற்புறுத்தியதால் ஆற்றைக் கடக்க முயன்ற சமயம் நீரில் மூழ்கி 45 குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர்.

இக்குழந்தைகள் அனைவரும் 9 வயது முதல் 15 வயதிற்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

# அயர்லாந்தில் குடியுரிமை சலுகைகள் இரத்தாகும்

(டப்ளின்)

அயர்லாந்து அந்த நாட்டின் குடியுரிமைச் சட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. இதன் மூலம் சட்டவிரோதமாகக் குடியேறுவோருக்கு கடந்த காலங்களில் வழங்கப்பட்ட குடியுரிமைச் சலுகைகள் தடை செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு பிரஜைகள் ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டு குடியுரிமை பெற்றதன் காரணமாகவே இந்த நிலைக்கு அயர்லாந்து அரசு தள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் அயர்லாந்தில் குழந்தைகளைப் பெற்றோருக்கான குடியுரிமை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் குடியுரிமை கோரி விண்ணப்பித்திருப்பதாகவும் அவர்கள் தனித்தனியாக விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 1999ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஐரோப்பிய யூனியனைச் சாராத 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அயர்லாந்தில் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கடந்த வருடம் அந்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (பி-9)

## பெற்றோல்-மதுசாரத்தில் இயங்கும் கார் அறிமுகம்

(சாவ்பாலோ)

ஒரேசமயத்தில் பெற்றோல் மற்றும் மதுசாரத்தில் இயங்கும் காரை பிறேசில் நாட்டு கார்த் தொழிற்சாலை அறிமுகம் செய்துள்ளது. இதில் மதுசாரம் கரும்புச் சக்கையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒருவகையாகும்.

மாற்று எரிபொருளைப் பயன்படுத்துவதற்கென பிரத்தியேகமாக ஃப்ளக்ஸ் ஃப்யூவல் (எரிபொருள் மாறுதலை எளிதில் பின்பற்றக் கூடிய) என்ற இஞ்சினை சில நிறுவனங்கள் ஏற்கனவே தயாரிக்கத் தொடங்கிவிட்டன. இந்த இஞ்சின் மூலம் ஒரே சமயத்தில் மாற்று எரிபொருள் மூலமோ அல்லது இரண்டையும் கலந்தோ வாகனத்தை இயக்க முடியும். (பி)

ஏற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.
– குறள்

# வலம்புரி

## குழப்புகிறார் ரவூப் ஹக்கீம்

வடக்குக்கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, முஸ்லிம் கட்சிகள் நேர்கொண்ட பார்வையில் செயற்படாமல் சமாதான முயற்சிகளைக் குழப்பும் வகையில் செயற்படுவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

இருபது வருடகால யுத்தம் இலங்கை நாட்டின் ஒவ்வொரு பிரஜையையும் பாதித்ததென்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. ஆனால் இனயுத்தம் ஏற்பட்டதன் அடிப்படை, அதனை தீர்க்க வேண்டியதன் அவசியம் போன்றவற்றை சிந்திக்காது, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னதாக முஸ்லிம்களுக்கு சுயாட்சி பெற்றுவிட முயற்சிக்கும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் போக்கு, ஓர் பொறுப்பற்ற தன்மையையும் தமிழ் மக்களின் பிரச்சினையை உணர்ந்து கொள்ளாத மனநிலையையும் காட்டி நிற்கிறது.

இலங்கைத்தீவில் இடம் பெற்று வரும் இனயுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டுமாயின், முதலில் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அவ்வாறு தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் அதற்கு விடுதலைப் புலிகளுடன் பேசுவதும்-அவர்களின் கோரிக்கையை தகுந்த முறையில் பரிசீலிப்பதும் தவிர்க்க முடியாத விடயங்கள் ஆகும்.

இந்நிலையில், முஸ்லிம் அரசியல் கட்சிகள் முந்திக் கொண்டு, முஸ்லிம் இனப் பிரச்சினைக்குத் தீர்வுவேண்டுமென்பது போல் செயற்பட்டுக் கொள்வது சமாதான சூழ்நிலையைக் குழப்புவதாக அமையுமே தவிர இனப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தர தீர்வைத் தருவதற்கு அது ஏதுவாகாது. இதனை உறுதிப் படுத்தும் வகையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹககீம் அரசிடம் விடுத்த வேண்டுகோள் அமைந்துள்ளது. வடக்குக்கிழக்கு இடைக்கால நிர்வாக சபையின கீழ் முஸ்லிம் மக்களை விடுதலைப்புலிகள் ஆளுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதென அமைச்சர் ஹக்கீம் கூறியிருப்பது இடைக்கால சபைத் திட்டத்தைக் குழப்புவதாக உள்ளது.

வடக்குக்கிழக்கு இடைக்கால சபையை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு அரசு இணக்கம் தெரிவித்து அதற்கான திட்ட வரைபையும் அவர்களிடம் கையளித்திருக்கும் வேளையில், வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாக சபையின் கீழ் முஸ்லிம் பகுதிகளை ஆளும் உரிமையை எம்மிடமே தர வேண்டும் என அமைச்சர் ஹக்கீம் கோரிக்கை விடுத்திருப்பது நிலைமையைக் குழப்புவதற்கான முதல் நடவடிக்கை எனக் கருதலாம்.

# இஸ்ரேல் ஆயுத உற்பத்தி நிறுவனங்களுக்கு திலக் மாரப்பன, சந்தகிரி சகிதம் விஜயம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன,கடற் படைத்தளபதி தயா சந்தகிரி ஆகியோருடன் ஆயுதக் கொளவனவுக்காக இஸ்ரேல் சென்றுள்ள உயர் அதிகாரிகள் குழாம், பல வருடங்களுக்கு முன்னர் இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட டோறா ரோந்துப் படகுகளுக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் அங்கு சென்ற இவர்கள் இஸ்ரேல் எயர்கிராப்ற் இன்டஸ்றீஸ், இஸ்ரேல் மிலிற்றறி இன்டஸ்றீஸ்,ரபீல் ஆயுத உற்பத்தி நிறுவனம்,எல்பிற்,எலொப் உற்பத்தி நிறுவனங்கள் ஆகியவற்றை பார்வையிட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் உயர் மட்டத்தில் இரகசியமாக இந்த விடயம் பாதுகாக்கப்பட்டு வந்தது தெரிந்ததே. இந்தக் குழுவினரின் விஜயத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் இஸ்ரேலின் உயர்மட்ட தூதுக்குழுவொன்று கொழும்பு வந்திருந்தது. இக்குழு மேஜர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் வந்திருந்தது. இந்த உயர்மட்டக்குழுவுடன் ஆயுதத்தரகர்களும் வந்திருந்தனர். ஸ்வி யூசுப், மோஷேஸ்ரவ் ஆகிய இவர்கள் இலங்கைக்கும் இஸ்ரேலுக்குமிடையே பல ஆயுதத் தரகுகளில் முன்னர் ஈடுபட்டவர்கள்.

பாதுகாப்பு அமைச்சின் இந்த ஆயுதக் கொள்வனவு ஏற்பாடுகள், விடுதலைப் புலிகள் தொடர்பான அரசாங்கத்தின் புதிய கொள்கையை காட்டுவதாக அரசியல ஆய்வாளர்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய அதிகாரி மேஜர் ஜெனரல் பென் - ஹனன் இவ் ஆயுதக்கொள்வனவு பற்றித் தெரிவிக்கையில்;

இருநாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவதும் இஸ்ரேலின் இராணுவ உப்கரண ஏற்றுமதியை அதிகரிப்பதுமே இதன் நோக்கமென தெரிவித்தார்.

இவ் ஆயுதக் கொள்வனவு தொடர்பில் ஒப்பந்தமெதுவும் செய்யப்பட்டிருக்கவில்ல என்றும் பேச்சுக்கள் தொடருமென்றும் இலங்கைப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த இரண்டு தசாப்த காலத்தில் இஸ்ரேல் பல டோறா படகுகளையும், பலகிபீர் விமானங்களையும் இலங்கைக்கு விற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## சுவிஸ் நிறுவனத்தினால் 1400 வெடிப்பொருட்கள் தலைமன்னாரில் அகற்றப்பட்டன

(கிளிநொச்சி)

தலைமன்னாரில் இதுவரை 7ஆயிரத்து 200சதுரமீற்றர் பரப்பளவில் ஆயிரத்து 400 கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் அகற்றப் பட்டுள்ளன.

மன்னாரில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைக் குழுவினரின் மாதாந்தக் குழுக்கூட்டத்திலேயே இத்தகவல் வெளியிட்டப்பட்டது.

நேற்று முன்தினம் மன்னார் அரச செயலகத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் வடகிழக்கு கண்ணிவெடி அகற்றும் பிரிவின் இணைப்பாளர்கள் மற்றும் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள், மன்னார் மாவட்ட அரசபடையதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரும் இணைந்து ஆயிரத்து 185கண்ணிவெடிகளை அகற்றியிருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(உ-8)

## இந்திய கப்பல்துறை அமைச்சர் அடுத்தமாதம் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இந்திய கப்பல்துறை அமைச்சர் சத்துருக்கன் சின்ஹா அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை, இந்திய நாடுகளுக்கிடையே நடைபெறவுள்ள கப்பல் சேவைகுறித்து பேச்சுவார்த்தை நடத்துவதே இவ்விஜயத்தின் நோக்கம் எனக்கூறப்படுகிறது.

இலங்கை இந்திய நாடுகளுக்கிடையே கப்பல் சேவையை நடத்துவது பற்றி ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தாலும், இது குறித்து இலங்கை அரசதரப்பினருடன் இந்திய கப்பல்துறை அமைச்சர் சத்துருக்கன் சின்ஹா விரிவாகப்பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதேவேளை திருகோணமலை மூதூருக்கிடையிலான படகுச் சேவைநடத்தும் பொறுப்பினை துறைமுக அதிகாரசபை ஏற்றுக் கொண்டுள்ளதுடன் இதற்கு தேவையான 100படகுகளை 5மில்லியன் ரூபா செலவில் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

(உ-8)

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உயர்நீதி மன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

சமுர்த்தி அதிகார சபை பதவியில் இருந்து இடைநிறுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 4 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கொழும்பு உயர் நீதிமன்றில் அடிப்படை மனிதவுரிமை மீறல் மனுவைதாக்கல் செய்துள்ளனர்.

கல்கமுவ, பிங்கிய, பத்தேகம, முகத்தலாவ ஆகிய பிரதேசங்களை சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தவர்களே இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

பிரமுக வங்கியில் சமுர்த்தி நிதியை வைப்புச் செய்ததன் மூலம் அதிகார சபைக்கு நஷ்டத்தை ஏற்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்நான்கு நபர்களும் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டனர்.

இவர்கள் தாக்கம் செய்த மனுவில் சமுர்த்தி நிதியை தனியார் வங்கிகளில் வைப்புச்செய்வதற்கு சட்ட பூர்வமான அதிகாரம் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

(தி)

## 60 ஆயிரம் வருடங்களின் பின் பூமி - செவ்வாய் நெருக்கத்தில் தோன்றும் அரிய காட்சி விண்ணில்

(கொழும்பு)

பூமியும் செவ்வாய்க் கிரகமும் ஒன்றையென்று அண்மித்து வரும் கண்கொள்ளாக் காட்சியை காணும வாய்ப்பு வெகு விரைவில் ஏற்பட உள்ளது.

இவ்விரண்டு கிரகங்களும் ஒன்றையென்று நோக்கி ஒவ்வொரு 5 நொடிக்கும் 30 கிலோமீற்றர் என்ற வேகத்தில் விரைந்து ஓக்கஸ்ட் மாதம் 27 ஆம் திகதி அருகருகே வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு ஒன்றையென்று அண்மிக்கும் நிகழ்வானது 60 ஆயிரம் வருடத்துக்கு ஒரு முறை நடைபெறுகிறது. இதற்கு முன்பும் இவ்வாறு நெருங்கி வந்துள்ளன.

இந்த நிலையில் செவ்வாய்க் கிரகத்துக்கும் புவிக்கும் இடையிலான தூரம் 55.7 மில்லியன் கிலோ மீற்றர்கள் ஆகும். இப்போது கூட இரவு 11.00 மணியளவில் இரத்தச் சிவப்புடன் கூடிய சிவப்பு கிரகம் நட்சத்திரங்களுக்கு மத்தியில் திகழ்வதைக் காணலாம்.

தொலைநோக்கு கண்ணாடி மூலம் செவ்வாய்க்கிரகத்தை நோக்கினால் சில வித்தியாசமான நிலைமைகள் நிகழ்திருப்பதை அவதானிக்கலாம். அதன் தெற்குப்புறம் பனியால் மூடப்பட்டுள்ளது சூரிய வெளிச்சம் அதில் படுவதன் காரணமாக அது வெள்ளை நிறமாகத் தென்படுகிறது. 8 அங்குல தொலைநோக்கு கண்ணாடி மூலம் செவ்வாய்க்கிரகத்தை பார்த்த போது வெள்ளை நிற படிவு படிந்திருப்பதை காணக்கூடியதாக இருந்ததென தம்பா புளோரிடாவைச்சேர்ந்த ரோய் வெமன் கூறியுள்ளார்.

இப்பொழுதிலிருந்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முழுவதும் செவ்வாய்க்கிரகத்தின் பிரகாசம் தொடர்ந்து கூடிக்கொண்டே வரும் ஓகஸ்ட் 27 திகதி அன்று மாத்திரம் கிரகம் விண்வெளியில் பிரகாசத்துடன் திகழும்.

பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள நட்சத்திர ஆர்வலர்கள் இதனை மிகவும் தெளிவாகக் காண்பர். பண்டைய கால உரோமர்கள் செவ்வாய்க்கிரகத்தை யுத்தத்திற்கான கடவுளாக வழிபட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

(உ-8)

## குரங்குபாஞ்சான் முகாமை அப்புறப்படுத்த வேண்டும் கண்காணிப்புக்குழு பிரதித்தலைவர்

(யாழ்ப்பாணம்)

திருமலை குரங்குபாஞ்சான் பகுதியில் விடுதலைப்புலிகள் அமைத்துள்ள புதிய முகாம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே அமைந்துள்ளது. கடந்த செவ்வாய் அன்று நாம் நடத்திய நில அளவைகளின் மூலம் இது உறுதியாகிறது என யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதித்தலைவர் ஹொக்கலன்ட் கடந்த புதன் அன்று கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்களித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

புலிகள் அமைத்துள்ள இம் முகாமை நாம் ஏற்கனவே அப்புறப் படுத்த வேண்டும் என தீர்ப்பளித்துள்ளமை சரியானதே. எமது அத் தீர்ப்பை முன்பு புலிகள் கருத்தில் கொண்டு செயற்படவில்லை ஆனால் தற்போது நில அளவையின் மூலம் இம்முகாம் அமைந்துள்ள பகுதி இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ளது என உறுதியாகி உள்ள நிலையில் புலிகள் அப்படை முகாமை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என ஹொக்கிலன்ட் மேலும் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொக்கி டெலிவ்சன் கடந்த புதனன்று வன்னியில் கடற்புலிகளின் தளபதி சூசையைச் சந்தித்து புலிகள் கடல் வழியான பயணம் குறித்து முன்வைத்துள்ள யோசனைகள் பற்றி முழுமையாக ஆராயப்பட்டது தெரிந்ததே.

இந்த யோசனைகள் குறித்து கண்காணிப்புக்குழுத் தலைவர் பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

(உ-15)

### திசரி தியானம்

### சுவர்க்கம்

இறைவனே சுவர்க்கமாக இருக்கின்றார். அந்த சுவர்க்கம் உங்கள் உள்ளத்தில்தான் இருக்கிறது. அங்கு நீங்கள் இறைவனைக் காணலாம். ஆனால் உள்ளத்தை முதலில் தூய்மையாக்கிக் கொள்ளவேண்டும். பொறாமை இச்சை போன்ற களைகளை அகற்றுங்கள். புலன்களை அடக்கி வையுங்கள் மனத்தை ஒரு முகப்படுத்துங்கள் மேலெழும் உணர்ச்சிகளை அமைதிப்படுத்துங்கள் அன்புக்குரியவரான இறைவனைக் காணலாம்.

சுவாமி சிவானந்தர்

## தேர்தல் குழுவின் தலைவர் நியமனம் பொது ஜனஐக்கிய முன்னணி வரவேற்பு

(கொழும்பு)

தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கான பாராளுமன்ற குழுவின் தலைவர் பதவியை பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ்குணவர்தனாவுக்கு வழங்குவதில் சர்ச்சைகள் எவையும் இல்லையென பொது ஜனஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் தேர்தல் முறையை மறுசீரமைப்பதற்கான தெரிவுக்குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ்குணவர்ததனாவை நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அமைச்சர் அவைப்பேச்சாளர் ஜீ.எல் பீரிஸ் அறிவித்திருந்தார்.

அரசாங்கத்தின் இத்தீர்மானத்துக்கு பொருத்தமானவர் இவரே எனவும் இதனை பொது ஜன ஐக்கிய முன்னணி வரவேற்றுள்ள தாகவும் சரத்அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் தீர்மானத்துக்கு அமையவே தனது தீர்மானம் அமையும் என பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டிருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

(தி)

# கணனிப் பயிற்சி நிறுவனங்கள்சில தரக்குறைவாக இயங்குகின்றன!

## எச்சரிக்கிறது கல்வி அமைச்சு

(கொழும்பு)

தற்போது நாட்டில் செயற்பட்டு வருகின்ற பல கணனிப் பயிற்சி நிறுவனங்கள், தரக்குறைவான பாட நெறிகளையே பயிற்றுவிக்கின்றன. இது குறித்து மாணவர்களும் பெற்றோர்களும் கவனம் எடுக்குமாறு கல்வியமைச்சு வேண்டுகோள்விடுத்துள்ளது.

இந்நிறுவனங்களில் பெரும்பாலானவை தமது வர்த்தக நோக்கத்தையே கருத்திற்கொள்கின்றன. இதற்காக பல விளம்பரங்களையும் செய்கின்றன. மாணவர்கள் தமது எதிர்கால தொழில் வாய்ப்பைக் கருத்திற் கொண்டே இத்தகைய விளம்பரங்களை நம்பி விடுகிறார்கள். ஆனால் உண்மையில் இத்தகைய நிறுவனங்கள் பல கல்வியமைச்சில் பதிவு செய்யப்படாதவை என்று மூன்றாம் நிலைக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு நிறுவனத்தைப் பதிவு செய்யும் போது பாடத்திட்டம் ஆசிரியர்களின் தரம், நிர்வாக வசதிகள் போன்றன கவனத்திலெடுக்கப்படுகின்றன. இதுவரை 100 வரையான நிறுவனங்களே பதிவு செய்யப்பட்டுள்ளவை. ஆனால் பல நூற்றுக்கணக்கான கணனி நிறுவனங்கள் பதிவுகளை மேற் கொள்ளாமல் இயங்குகின்றன. இத்தகையநிறுவனங்கள் பற்றியும் இனிமேலும் பதிவு செய்யாது திறக்கப்படுகின்ற நிறுவனங்கள் பற்றியும் பெற்றோரும் மாணவர்களும் பொலிஸில் முறைப்பாடு செய்யவேண்டும் என்றும் தமது பிள்ளைகளை நிறுவனங்களில் சேர்ப்பதற்கு முன் பெற்றோர்கள் அந்நிறுவனம் பற்றிகல்வி அமைச்சில் விபரங்களைக் கோர வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ)

# திறைசேரி அதிகாரிகள் பிரதமரைச் சந்திப்பர்

(யாழ்ப்பாணம்)

'வற்' வரி குறித்த தீர்மானமொன்றை எடுக்குமுகமாக 'திறைசேரி அதிகாரிகள் இன்னும் ஓரிரு நாட்களில் பிரதமரைச் சந்திக்கப் பேசவுள்ளனர் என நிதி அமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

'வற்' வரி மூலம் கிடைக்குமென எதிர்பார்த்த வருமான இலக்கிலிருந்து 2000 கோடி ரூபா குறைவாகவே இவ் 'வற்' வரி மூலம் நிதி கிடைக்கும் என கணிப்பீடுகள் மூலம் தெரியவந்துள்ளது. இந்நிலையில் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்படவிருந்த அபிவிருத்தி திட்டங்கள் பல கைவிடப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்படவிருந்த பல அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கைவிடுவது அல்லது, வேறு ஒரு புதிய வரி நடைமுறைப்படுத்தலின் மூலம் அடுத்த 6 மாதங்களிற்கான நிதியைத் திரட்டுவது என்ற இவ் இரு மாற்று வழிகளில் சாத்தியப்படக் கூடியதை தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ-15)

# சித்த மருத்துவ மாணவர்களுடன்

## எம்.பி.க்கள் நேற்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் என்.ரவிராஜ் ஆகியோர் சந்தித்துள்ளனர்.

சித்தமருத்துவ துறையை நிறுவனமயப்படுத்துவதை எதிர்த்தும் அதனை தரமுயர்த்துவது எனில் தனிப்பீடமாகத் தரமுயர்த்மாறு கோரியும் கடந்த 10 நாட்களாக மாணவர்கள் பகிஷகரிப்பு பேராட்டத்தை மேற கொண்டு வருகின்றனர் .

மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்பாகக் கேட்டறியும் முகமாகவும் அதுவிடயம் தொடர்பாக மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கை குறித்து ஆராயும் பொருட்டுமே இச்சந்திப்பு இடம் பெற்றது.

இதேவேளை ரவிராஜ் எம்.பி சித்த மருத்துவத் துறைத்தலைவர் டாக்டர் திருமதி மிதிலைச்செல்வி உட்பட விரிவுரையாளர்கள மற்றும் சித்தபோதனா வைத்தியசாலை வைத திய பொறுப்பதிகாரி ஆகியோரையும் சந்தித்து; கலந்துரையாடினர். (த)

# கண்ணீர் அஞ்சலி

பெருமதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரமாக விளங்கிய

## திரு. பொ. சோமசுந்தரம்

அவர்கள் காலமான செய்தி கேட்டு வேதனையும் அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் அடைகிறோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது அன்பு குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உடன் பிறவா சகோதரர்
சோ.புவனேந்திரன் குடும்பம்
அத்தியடி.

(7275)

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் நமசிவாயம்

(ஓய்வு பெற்ற நீர்ப்பாசன இலாகா படவரைஞர்)

## திருமதி மாதவி நமசிவாயம்

பொன்னம்பலம் நமசிவாயம், திருமதி மாதவி நமசிவாயம் தம்பதிகள் 14.07.2003 அன்று கனடாவில் நடந்த விபத்தில் அகால மரணமடைந்தனர். இவர்கள் துவாரகன் (கனடா), சுவேதிகா (கனடா), கோகுலன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தாயும்; திருமதி ஆனந்தராசா பவானி, சூரியகுமார், குகதாசன்,காலஞ்சென்ற கிருஷ்ண மூர்த்தி ஆகியோரின் அன்புச்சகோதரனும் அன்புமைத்துனியும்; திருமதி யோகேந்திரன் மாலதி, இளங்கோ, கோபாலன், திருமதி பாலச்சந்திரராஜன் அனுலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்பு மைத்துனரும் ஆவர்.

இவர்களின் ஈமக் கிரியைகள் 19.07.2003 இன்று சனிக்கிழமை கனடாவில் கனடா நேரம் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும். இதனையொட்டி இன்று கரவெட்டி மத்தி, கரவெட்டியில் உள்ள இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

க.ஆனந்தராசா (மைத்துனர்)
(கிராம உத்தியோகத்தர் கப்புகூ)

# செண்.ஜோன்ஸ் கல்லூரி பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

சென்ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் இன்று காலை 10.மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக குருநாகல் ஆயர் குமார பண்டார சாமுவேல் இலங்கசிங்கவும் அவரது பாரியாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-5)

# தடகளப் போட்டி

(பாசையூர்)

யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த தடகளப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் த. பரமசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி பொ. வேணுகோபாலவாணிதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (த-72)

# அலங்கார உற்சவம்

(வேலணை)

வேலணை வங்களாவடி ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. (த-47)

## ஜனாதிபதிக்கு...

கக் கூடிய சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் புதிதாக முகாம்களை அமைத்து வருகிறார்கள். இந்நிலையில் அரசாங்கம் யுத்தத்திற்கு தயாராக இருக்க வேண்டிய காலகட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். (ம)

## உலக வங்கிப்...

யுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் உலக வங்கியின் இலங்கைக்கான உதவித்திட்ட அறிக்கையின் முதற் தமிழ்ப் பிரதி மாகாணத்தலைமைச் செயலரிடம் கையளிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் திட்டப் பணிப்பாளர் துாயவன், மற்றும் திருகோணமலை மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுக்கும் அறிக்கையின் தமிழ்ப் பிரதிகள் வழங்கப்பட்டன.(இ)

# சம்பள அதிகரிப்பு சுற்றுநிருபத்தை இரத்துச் செய்யக்கோரி

## உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

சுகாதாரத்துறையில் வேலை நிறுத்தங்கள் இடம் பெறுவதை தடுப்பதற்கான தடைஉத்தரவைக் கோரி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு இவ்விசாரணையை நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கவுள்ளது.

பதிவுசெய்யப்பட்ட இரு மருத்துவ அதிகாரிகளினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில்,

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், அரசாங்க வைத்தியர்கள் சங்கம் என்பனவற்றின் அங்கத்தவர்கள் எதிர்காலத்தில் வேலை நிறுத்தம் மேற்கொள்வதற்கு தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனவும்,மேற்படி இருசங்க அதிகாரிகளின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள சுற்றுநிருபம் நீதியற்ற செயலாகும் என்பதுடன் அதனை இரத்துச் செய்யும் படியும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பி.தயாரட்ண உட்பட 36 அதிகாரிகளுக்கு எதிராக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

# கனடாவில் கார் விபத்து கரவெட்டி தம்பதியினர் பலி

(ரொரன்ரோ)

கனடாவின் ரொரன்ரோ நகரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கார் விபத்தில் கரவெட்டியை சேர்ந்த தம்பதிகள் கோரமாக பலியாகினர்.

பொன்னம்பலம் நமசிவாயம்,நமசிவாயம் மாதவி ஆகிய தம்பதியினரே மரணமானவர்களாவர்

தாதியாகத் கடமையாற்றும் தனது மனைவியை வேலைத்தலத்திற்கு காரில் அழைத்து சென்ற போது இரவு11.மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றது.

விபத்தில் இருவரும் ஸ்தலத்திலேயே பலியாகினர் இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். இதே வேளை மற்றைய காரில் வந்தவர்கள் சிறுகாயங்களுடன் உயிர்தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# தேசியப் போராட்டத்தை அங்கீகரித்த கலைஞன்

## என்.கே.பத்மநாதனின் மறைவுக்கு கலை பண்பாட்டுக் கழகம் அனுதாபம்

(கிளிநொச்சி)

தமிழீழ இசைத் துறைக்கு பேரிடியாக விழுந்த, இசை மேதை என்.கே.பத்மநாதனின் மறைவுக்கு விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டு கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளது.

இவ் அனுதாபம் குறித்து கலை பண்பாட்டு கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,இசைத் . துறையின் பெருமையை உலகெங்கும் பரவச் செய்த இசை மேதை என்.கே. பத்மநாதன் அவர்கள்புலிகளின் கலைபணபாட்டுக் கழகம் எடுத்த இசை விழாக்கள்,முத்தமிழ் விழாக்கள் மற்றும் நிகழ்வுகள் அனைத்திலும் கலந்து கொண்டு தனது இசையால் எம்மை கௌரவித்தவர். இறுதிவரை எம்முடன் அன்பும் மதிப்பும் கொண்டவராக இருந்தவர்.

எமது தேசிய தலைமையையும் விடுதலைப் போராட்டத்தையும் வெகு அடக்கமாக அங்கீகரித்தவர். இவரது இழப்பு தமிழீழ இசைத் துறைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவுக்கு எம்மணண சார்பாகவும் விடுதலை அமைப்பின் சார்பாகவும்,தமிழீழக் கலைஞர்கள் சார்பாகவும அவரது குடும்பத்தவர்களுக்கும் , கலைஞர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# வாழ்வகம்

விழிப்புல வலுவிழந்தோர் இல்லம் சுன்னாகம்

## 15வது ஆண்டு விழா

இடம்
வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்

காலம்
20. 07. 2003 ஞாயிறு காலை 9. 30

தலைவர்
செல்வி அ. சின்னத்தம்பி அவர்கள்
(தலைவர்/வாழ்வகம்)

பிரதம விருந்தினர்
திருமதி கமலா சிவசிதம்பரம் அவர்கள்
(செயலாளர் பொது நிர்வாகம் வ.கி.மாகாணம்)

சிறப்பு விருந்தினர்
திருமதி றெஜீனா இருதயநாதன் அவர்கள்
(வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்)

கௌரவ விருந்தினர்
செஞ்சொற் செல்வன் திரு. ஆறுதிருமுருகன் அவர்கள்
ஆசிரியர்-யாழ்/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

(3390)

வாழ்வக சமூகம்

# MEDICAL CHECK UP

## வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

## சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழப்பாணம்.